

# திருக்கோயில்

பிப்ரவரி
2000

விலை
ரூபாய் ஐந்து







பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 15.12.99 அன்று 61 இணைகளுக்கு இலவசத் திருமணவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் மணமக்களுக்கு மங்கல நாண் எடுத்துக் கொடுத்துத் திருமணங்களை நடத்திவைத்தார்கள். மாண்புமிகு ஊரகத் தொழில்வளர்ச்சி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள் இத்திருமணவிழாவில் கலந்துகொண்டு மணமக்களுக்கு சீர்வரிசை - பாத்திரங்கள் வழங்கினார்கள். அறங்காவலர் குழுத்தலைவர் திருமிகு கே.சி. பழநிசாமி மற்றும் அறங்காவலர்கள், திருக்கோயில் இணை ஆணையாளர் / நிர்வாக அதிகாரி திருமிகு தி. ஜெயராமன், பி.ஏ.பி.எல். ஆகியோர் இலவசத் திருமண விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

# திருக்கோயில்





திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2031 | பிரமாதி ஆண்டு மாசி | மணி |
|---|---|---|---|
| 42 | பிப்ரவரி 2000 | | 2 |



## சிறப்பாசிரியர்

திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.

ஆணையாளர்

## ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,

எம்.ஏ., பி.எச்.டி.

## ''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.

கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமதி மா. கவிதா, பி.எல்.

ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயில், பழநி.


## முகப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு ஆண்டாள் - அருள்மிகு ரங்க மன்னார்

## பொருளடக்கம்


தரணிக்கே மறை தந்த தமிழ்மன்ற ஞானி

- மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்

இட ஒதுக்கீடு

- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., ஆணையாளர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை

ஸ்ரீவில்லிபுத்தூரும் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாளும்

- முனைவர் வை. பழநிச்சாமி, இ.ஆ.ப

கடவுளின் திருவடி இன்பமடா

- முனைவர் த. அமிர்தலிங்கம்

ஒரு வாசகமென்று உணர்

- சித்தாந்த ஞாயிறு டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி

செண்டைக் கண்டுகொண்டேன்

- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் இந்தியா

- திருமதி பட்டம்மாள் ஆனந்தா

சூரியனார் அருள் வழங்கும் ரதஸப்தமி விரதம்

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

கம்பரின் இராமாவதாரம்

- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

ஸ்ரீ சாரதா புஜங்கம்

- ஸ்ரீ பாரதி தீர்த்ததாசன்

வினாவும் விளக்கமும்

- டாக்டர் பருத்தியூர் கே. சந்தானராமன்

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்'' வள்ளுவரின் ஆணிவேர்க் கொள்கை

- புலவர் என்.டி. சிவலிங்கம், எம்.ஏ.பிலிட்.



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை


119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 8279407

# தரணிக்கே மறை தந்த தமிழ்மன்ற ஞானி

- மாண்புமிகு முதல்வர் **டாக்டர் கலைஞர்** அவர்கள்

(குமரியில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின் போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய தலைமைக் கவிதை திருக்கோயில் வாசகர்களுக்காகப் பெருமகிழ்வுடனும் நன்றியுடனும் வெளியிடப்படுகின்றது. படித்துமகிழ வேண்டுகின்றோம்)



அடலேறு மொழித் தமிழே - இன்பக்
கடலேறு தனித் தமிழே - சோலை
மடலேறு சுவைத்தமிழே - நீ என்
உடலேறி உயிரேறி வாழ்விக்கின்றாய், வணங்குகின்றேன்.

பேரன்பு கொண்டோரே!
பெரியோரே!
பெற்ற தாய்மாரே!
நல் இளஞ் சிங்கங்காள்!
பேராசிரியப் பெருந்தகையீர்!
பேரவையின் அருந்தலைவ!
ஒளிமிகுந்த கருத்தளித்து எமை மகிழ்விக்க!
வெளிநாட்டிலிருந்தும் வந்துள்ள உறவினர்காள்!
அமைச்சர் பெருமக்காள்!
அவை சிறக்க வந்திருக்கும்!
ஆன்றோரே,! சான்றோரே!

நமை வளைத்திருக்கும் முக்கடலின்
வயிற்றுக்குள் இருக்கின்ற முத்தைப் போல்
வாரி வழங்கத் தமிழ்க் கவிதை
வடித்தெடுத்து வந்துள்ள பாவலர்காள்!

கடற்கரையின் மென்காற்றும், நும்
கவிதையெனும் இளங்காற்றும் - எம்
துன்பமெல்லாம் நொடியில் ஆற்றும்.
தூய தமிழ்ப் புகழைச் சாற்றும்.
குருட்டு மதியை மாற்றும்.
குறளைப் போற்றும்....
குவலயத்தின் மத்தியிலே
குன்றா விளக்கை ஏற்றும்.

அறம் பொருள் இன்பமெனும்
அறிவுப் பதாகைதனைப் பிடிப்போம்.
ஆதி பகவன் மைந்தன் ஆணை வழி நடப்போம்.
அதைத் தடுக்க முனைவோரின் செயல்களையே
முடிப்போம்.

இலக்கணத்தை எதிர்க்கும் எண்ணம் என்பால் இல்லை
இலக்கணம் தான் என்னோடு ஊடல் செய்யும் அன்புக் கிள்ளை.

ஒருபாட்டும் இலக்கணமுடன் ஒருப்பட்டு வராவிடினும் நான்

தரும்பாட்டு தமிழ் உணர்வைக் கொல்லாதெனும் துணிவுடனே

கரும்பாட்டும் ஆலையிலே வேம்பொன்று புகுந்தது போல்
கவிக்கூட்ட மேடையிலே வீரமாய்ப் புகுந்துவிட்டேன் - தென்றல்

அரும்பாட்டும் பூங்காவில் உங்கள்
அரும்பாட்டு தமிழ் மாலையிலே பூவாம்.

அந்தப் பூ ஆடும்
கரும்பாட்டம் இருக்கின்றீர் நீங்கள் நானோ
துரும்பாட்டம் இருக்கின்றேன் உம்மிடையே ....
எறும்பாட்டும் இரும்புத் தூண் என்றால்
எறும்பு ஆட்டும் இரும்புத் தூண் என்றால் என்
வெறும் பாட்டும் வென்று விடும் நும்மை.
சோலைக்குயில் பாடும்
கோலமயில் ஆடும்
ஞானக்கிளி தாவும்
மோனத் தவமிருக்கும்
வானத் திருமேனி
வண்ணப்பொடி தூவும்
வானவில்லும் வளையும்
காலைக்கதிர் விளையும்
நீலக் கடலோரம்
நித்தம் தவம் புரியும்
குமரி எல்லை வந்தோம்
குதிகுதித்து நின்றோம் - இங்கு
வான் முட்டும் சிலையொன்று
வள்ளுவர்க்கு அமைத்துள்ளேன்
வருக நீவிர் வாழ்த்துரைக்க என்று
வாஞ்சையுடன் அழைத்துள்ளேன்
குமரிக்கடல் குலுங்க கையொலித்து
குன்றங்கள் நடுநடுங்க வாழ்த்துரைத்து
அய்யன் வள்ளுவனின் அடிதொடர குளுரைப்பீர்...
உய்ய வழி வேறில்லை குறளைத் தோள் சுமப்பீர்!
ஓவியம் வரைந்தேன் குறட்பாக்களுக்கு - உரைக்
காவியம் வரைந்தேன் திருக்குறள் முழுமைக்கும்

இன்னும் இன்னும் எண்ணிப் பார்க்கின்றேன்
என்ன இல்லை எதை எழுத விட்டு விட்டான் அய்யன் என்று

கன்னத்தில் கை வைத்துச் சிந்திக்கின்றேன்.

அன்னத்தின் தூவியிலே கறுப்பின்
சின்னத்தைக் காணப்போமோ?
அதனால் தான் குறையிலாக் குறள் என்றும்
அணுக்கூட கறையில்லா மறை என்றும் கூறுகின்றோம்....

சமத்துவப் பேரொளியாய்
சமுதாயப் புரட்சி செய்யும்
தத்துவப் பெரு ஞானியாய்
மகத்துவம் மிகக் கொண்ட மனித குலத் திருவிளக்காய்
பூமிக்கே புனித உரை வகுத்தளித்து
புத்தெழுச்சி பெற்றுத் தந்த புனிதனவன்.

அருளாதாரம் வழங்கி அனைத்துயிரும் போற்றியவன் - அரசியல்

பொருளாதாரம் என ஆய்வுரையை ஆற்றியவன் - ஆளும்
கலாச்சாரம் எதுவெனக் காட்டியவன்! வள்ளுவன்! வள்ளுவன்! வள்ளுவன்!

அறத்துப் பால் முப்பத்திரட்டு அதிகாரம்
அதுதான் இங்கே வள்ளுவன் சிலைக்கு அடிபீடம்
அதிகாரத்திற்கொரு குறளை அடியேன் எடுத்து
அதி - காரமின்றி படைக்கின்றேன் தொகுத்து!

ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனின்
உயர் அடியொற்றி நடப்பவரை
வாட்டும் தொல்லை வருத்துவதில்லையெனக் குறளில்
காட்டுவதும் வள்ளுவன் தானே!

(தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது)

மழைதான் அமிழ்தமென்றும் உயிர் வாழ
மருந்தும் அதுவே என்று மொழிவதும் குறட்பா தானே!

(வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று)

ஐம்புலப் பசியை அடக்க முடியாமல்
அவதிப்பட்டான் இந்திரன் என்று
பொல்லாதார்க்கும் புலன் அடக்கப்
புத்தியைத் தீட்டுவதும் வள்ளுவம் தானே!

(ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி)

மனத்தூய்மை தான் நல் அறமென்றும்
மற்றவை எல்லாம் மன்பதையில்
ஆரவார கோஷங்களே என்றும்
அறிவுறுத்துவதும் குறள் நெறி தானே!

(மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற)

பளிங்கு எனப்படுமே
பழிப்புக்கு இடமில்லா மனைமாட்சி
இல்லறம் என்பது அதுவே என்று
இசைப்பதும் இனிய குறள் தானே!

(அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று)

பெய் எனச் சொன்னதும் பெய்யும் மழையாய்
பெண் குலம் அடிமைப்படுவதை விடுத்து
மெய்யுரை கண்டு மெல்லியல் நிமிர்ந்திட
அய்யன் படைத்தது அருங்குறள் என்போம்...
(தெய்வம் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை)

ஏழேழு தலைமுறைக்கும்
எந்தத் தீமையும் தீண்டாதிருக்க
சீரோடு புதல்வரை வளர்த்தல் நன்றாமென
செப்பிடும் உரையும் செந்நூல் குறள்தானே!

(எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்)

என்பும் பிறர்க்கு ஈவார் அன்புடையார்
எல்லாம் தமக்கென்பார் அன்பில்லார்
குணக்கேடர் செயல் தோலுரித்து
கொடையுள்ளம் போற்றுவதும் குறள்வழி தானே!

(அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு)

விருந்தினர்க்கே முதலிடமாம், மிஞ்சியதே
வீட்டுக்கென்போன்
விதையைக்கூட நிலத்துக்கன்றி விருந்துக்கே
சேர்த்தளிப்பான்
விரிந்து பரந்ததவன் மனமென்று
தெளிந்து சொல்வதும் திருக்குறள் தானே!

(வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்)

பிஞ்சும் காய்களும் ஒரு மரத்தில் குலுங்கிட
பிறிதோர் மரத்தில் கனிக்குலை தொங்கும்
கனி விடுத்துக் காய் பறித்தவனைக் கண்டு
இனிய உளவாக இன்னாத கூறுவார்க்கு
உவமையாக்கியதும் இந்த உலக மறை தானே!
(இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய்கவர்ந் தற்று)

என்றோ செய்த நன்மையை நினைத்து - அவன்
இன்று விளைத்த தீமையை மறந்திடுக என்பதும்
செய்நன்றி அறிதற்கு இலக்கணம் எனச்
செப்பியவரும் செந்நாப்போதார் தானே!

(செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது)

எச்சத்தால் காணலாம் தக்கார் தகவிலரை
என்பதற்கு அவர்தம் மக்களைச் சுட்டின் பொருந்தாதென்று
உச்சத்தில் அவர் கொண்டிருந்த புகழைத்தான் எச்சமென
உரைத்திட்ட உண்மையின் புதையல் குறளேயன்றோ!

(தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப்படும்)

நாகாக்க என்றானே; நாயகன் வள்ளுவன் - அதை
நடுத்தெருவில் போவோர் வருவோர்க்கெல்லாம்
சொன்னானா?
துடுக்காக இப்படியொரு வினா எழுப்பியவரை மன்றில்
மடக்கிப் போட்டார் அண்ணா நாக்கு இருப்பவர்க்கு
மட்டும் தான் சொன்னான் என்று.

(யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிமுக்குப் பட்டு)

இழிந்த குடியென்று ஒழுக்கம் ஒழிந்ததையும்
சிறந்த குடியென்று ஒழுக்கத்தில் உயர்ந்ததையும்
இரண்டையும் ஒப்பிட்டுக் காட்டியதும் -
இரு நிலை உணர்த்தியதும் இந்தப் பொய்யா மொழியன்றோ!

(ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்)

வேறொருவர் மனைவியை நோக்குங்கால்
விழி நோக்கு இழி நோக்கு நோக்காதார்
விரிகடல் ஒழுக்கத்தார் வரிசையிலே
வீற்றிருப்பார் என விளம்புவதும் இந்த வித்தகர்தானே!

(பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ ஆன்ற வொழுக்கு)

நாள்தோறும் தன்தலையில் குப்பை கொட்டிய பெண்
ஒருத்தி
நலிவுற்றுப் படுத்திருந்த சேதி கேட்டு - அவள்
நலம் கேட்க ஓடினாராம் நபிகள் நாயகம்!
சிலுவையில் அறைந்த போதும் சிரித்த முகம் இயேசுவுக்கு!
அடக்குமுறை அடுக்கடுக்காய் சகித்துக் கொண்டார்
அப்பர் பெருமான்!

அதனால் தான்
அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார் பொறுத்தல் தலையென்றான் என் அய்யன்.

(அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை)

எட்டுத் தலைப்பில் பாட இருக்கின்ற கவிஞர்க்குள்
போட்டியிருக்க வேண்டும் பொறாமை தலைகாட்டக்
கூடாது;
காட்டாதென இந்தக் கலைஞனும் அறிவேன்.
அழுக்காறு என்பதென்ன? அது அயலூர்ப் பொருளல்ல;
அது நம் உள்ளத்தின் உற்பத்தி
உடலோடு பிறந்த தீய சக்தி
அப்பாவி நம்மை ஒழிப்பதற்குள்
அப்பாவி யாய் இராமல் நாம் அவனை ஒழித்திடுவோம்.
அய்யன் வள்ளுவனின் ஆணையாம் இஃது - இம்
மெய்யுரை கேட்பின் மேன்மை பல உண்டாம்!

(அழுக்காறு என ஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்)

பறிப்பதொன்றே பெரும்பணி பிறர்பொருளை என்றே
பழகிக் கொண்ட பகற் கொள்ளைக்காரருக்கு

பகுத்தறியும் நுண்ணறிவு இருந்தென்ன போயென்ன
தொடுத்திடும் இவ்வினாவும் என் அய்யன் வகுத்த குறளே!

(அஃகி யகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்)

சாவது நலமாம் சாற்றுகின்றான் அய்யன் - எப்போது?
ஆனது ஆகட்டுமென்று புறங்கூறிப் பொய்த்துயிர்
வாழ்ந்திடும்போது
சாவது நலமாம் என்று
சாற்றுகின்றான் அய்யன்.

(புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்)

மண்ணில் காணும் தானியத்தில் பதர் உண்டாம்!
மனிதரிலும் பதர் உண்டாம் உண்டாம்! பலர்முன்
பயனற்றவை கூறிப் பயன்பெற முனையும்
பகல் வேடதாரியைப் பதர் எனப் பகருகின்றான் அய்யன்!

(பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்)

இருட்டில் இருக்குமிடந் தெரியாமல்
வெளிச்சத்தில் மட்டும் வெளிப்படும் நிழலைப்போல்
தீச்செயல் புரிவோரை விட்டு விலகாமல்
தீமையும் ஒட்டிக்கொண்டே இருக்குமென
உவமை காட்டி உரைத்திட்ட புலமை என்னே;
உலகில் இந்தக் குறள் விளைத்த புதுமை என்னே!

(தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வியா தடியுறைந் தற்று)

ஒப்புரவு எனும் பிறர்க்கு உதவும் பண்பினை
இன்றைய உலகிலும் இனிவரும் புதியதோர் உலகிலும்
காண்பது அரிது எனக் கண்டறிந்து சொன்ன
கற்கண்டுக் குறளுக்கு ஈடேது? இணைதான் ஏது?

(புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற)

ஆதாயத்தை எதிர்பார்த்துக் கொடை வழங்காதே;
ஆகாரத்தை எதிர்நோக்கி ஏங்குவோர் குடலுக்கு ஏதேனும்
வழங்கிடுக!

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று
வள்ளலார் சொன்னது வள்ளுவன் சொன்னது தானே!

(வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து)

தோன்றின் புகழோடு தோன்றுக என்றால் தொட்டதுறையில்
தொடர்புகழ் எய்துக; அல்லால் எத்துறையும் தொடாதே
என்பது
ஆன்றவிந்தடங்கிய ஆசான் அறிவுரை.
சான்றுகள் பற்பல இந்த ஜகத்தினில் காணலாம்.
(தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று)

பொருள் இலார்க்கு இல்லறம் சிறக்காதென்பதையும்
அருள் இலார்க்கு துறவறம் நிலைக்காதென்பதையும்
இவ்வுலகம் அவ்வுலகம் என்று காட்டுகின்றான் - இனி
எவ்வுலகம் உதித்தாலும் அவ்வுலகின் காண இயலா
அறிவாசான்!

(அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு)

தீராதோ துன்பமென்றும்; வாராதோ கோரிய
வரங்களென்றும்;
தீயிலிட்டுப் பொருள்களை வீணே கொளுத்தும் வேள்விகள்
ஆயிரம் செய்வதை விட
பண்ணிய பாவங்கள் தொலைத்திட இனியும்
புண்ணியமென ஒன்றிருந்தால் அது வந்து புகுந்திட
உயிர் ஒன்றைப் போக்காமல் அதனை
உணவாக ஆக்காமல் இருந்தாலே போதுமென
உளமுருகச் செய்கின்ற உபதேசம்; ஊருக்கல்ல -
உனக்குமெனக்கும் சேர்த்துத் தான் என உரைத்தவன்
உத்தமப் பெரியோன் வள்ளுவனன்றோ -
நித்திலமன்றோ அவன் தந்த திருக்குறளும்!

(அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று)

பொழியும் மழையில், பொல்லாக் கோடையில்
புற்றுகள் வளரினும் புதர்கள் மூடினும் - கடவுள்
புலப்படும் வரையில் கடுந்தவம் புரிவேன் என்று
பலப்பல சொல்வதெல்லாம் தவமல்ல என்பார்...
எந்த உயிருக்கும் தீங்கு இழைக்காதிருப்பதும்
எதையும் தாங்கும் இதயம் பெற்றிருப்பதுமே
தவமெனப்படுமென்று தகவாய்ச் சொல்வார்
தரணிக்கே மறை தந்த தமிழ் மன்ற ஞானி!

(உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு)

பச்சைக்கிளிகளையும் பால்நிறப் புறாக்களையும்
பிடிப்பதற்கு
இச்சையுடன் கண்ணி வைத்துப் புதரில் மறைந்துள்ள
பொல்லா வேடனைப்போல்
பாவையரைக் காமவேட்டையாட பாழும் துறவியர் சிலர்
பாசறை அமைத்து அதனைப் பக்தி மடமென்று
பசப்புகின்றார்
பகல் வேடதாரியும் பகவான் பேரால் ஏமாற்றும் எத்தனிடம்
எப்போதும் எச்சரிக்கை என்றுரைப்பதுவும் எங்கள்
அய்யன் தானே!

(தவமறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று)

எல்லைக்குள் வாழ்க்கையைச் செம்மையாய்
அமைத்திடாதார்,
கொள்ளைப்பொருள் சேர்த்திடவே நாட்டம்
கொண்டிடுவார்!

தொல்லை தரும் ஆடம்பரத்தை, போலிப் பளபளப்பை
தொடாமலே விட்டு விடச் சொன்னதுவும் தொலைநோக்குக்
குறள்மொழிதானே!

(அளவின்கண் நின்றொழுக லாற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்).

உண்மை மெய்ம்மை வாய்மை என்பதற்கு எல்லாமே
ஒரு பொருள் தான் என எண்ணத்தோன்றும்....
வாய்மைக்குத் தனியாக வடித்தெடுத்த பொருள் ஒன்றுண்டு
ஆய்ந்திடும் இடத்து ''பொய் அல்லாதது'' என்ற பொருள்
அல்ல
வாய்மை எனப்படுவது யாதெனின் எவருக்கும்
தீமையில்லாத சொல்லைச் சொல்லுதல்
இத்தனை தெளிவாய் இதற்குப் பொருளைப் பிழிந்து தந்திடும்
அத்தன் - அய்யன் - ஆசான் - குறள் ஞானி வள்ளுவன்
தானே!

(வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமையிலாத சொலல்).

எதற்காக நான் சினம் காக்க வேண்டுமென்று
எக்காளச்சிரிப்பு முழக்கி இளந்தளிர் ஒன்றையே
கசக்கிக் கொன்றான் கடுஞ்சினப் பிறவியொருவன் - அக்
கணமே மாமலை மனிதன் ஒருவன் மார்தட்டி அங்கு
வந்தான்
''மடையனே மல்யுத்தம் புரிய வருகிறாயா?'' என்று
மாமனிதன் கேட்டது தான் தாமதம்;
சிறுவனைக் கொன்ற சிறுமதியாளன்
சினங் காப்பது என் பண்பு எனச்சொல்லிச் சிறகடித்துப்
பறந்து விட்டான்.
'செல்லிடத்து சினங்காக்காமல் அல்லிடத்துக்
காத்தால் என்ன காவாக்கால் என்ன' என்று
வள்ளுவன் வாய் மணக்கக்கூறியதை
தெள்ளு தமிழ் வேதமெனல் பொருத்தம் தானே!

(செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்)

தீமை எனக்குச் செய்தவரை தெண்டனிடச் செய்ய
வேண்டும்
ஆமை போல அடக்கி ஒடுக்கிப் போட வேண்டும்
அதற்கென்ன வழியென்று ஒரு பிள்ளையாண்டான்
அடர்ந்த மீசையை முறுக்கி விட்டான் - அப்போது
அங்கு வந்த வள்ளுவர் அவனைப் பார்த்து
அதற்கு ஒரு வழி சொல்வேன் என்றார்
அதிர்ச்சியுற்று இளைஞன் பார்த்தான்!
''அடலேறே! உனக்கின்னா செய்தவன்
தலை குனிய வேண்டும், அது தானே உன் ஆசை;
தயங்காமல் இப்போதே அவனுக்கு நன்மை செய்து விடு!''
''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்வது தான்'' என்ற
இறையன்றோ எங்கள் அய்யன் ... ஒரு
குறையுண்டோ இந்தக் குறட் பாவுக்கு!

(இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்)

சான்றோர் கூடிய சபையொன்றில்
நூலோர் தொகுத்தவற்றில் தலை எதுவென
தர்க்கமொன்று நடந்ததாக ஒரு கற்பனை!
பக்கம் நின்று பல்லோர் பார்த்திருக்க
வர்க்கபேதம் ஏற்காத வள்ளுவன் அங்கே வந்து
வான்புகழ் குறட்பாவால் விளக்கம் தந்தான்
இருப்போர் இல்லாதார் என்றில்லாமல்
இருப்பதை அனைவரும் பகிர்ந்து கொண்டு
எல்லா உயிரும் வாழ வேண்டுமென்ற
சமநிலைக் கொள்கையே நூலோர் தொகுத்தவற்றுள் தலை
என்றான்
அந்தத் தலைமகன் வள்ளுவன் குறளைத் தமிழ்மறை
என்பது தவறு;
தரணி முழுமைக்கும் அதுவும் ஒரு மறையன்றோ!

(பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை).

காளை போனவன் இன்னும் திரும்பவில்லையே என
நாளைக் கோடுபோட்டு எண்ணிக் கலங்கி
பாளைச் சிரிப்பழகு பதுங்கிக் கொள்ளும் காதல்
பாவையர் கவலைகள் அன்றைக்கு நடைமுறை!
அப்போதே வள்ளுவன் நாளுக்கும் வாளுக்கும்
உவமை காட்டி உரைத்திட்டான் ஒரு குறள்!
நாள் என்பது ஒருவரின் ஆயுளை அன்றாடம்
வாள் போல அறுத்துக் கொண்டே யிருப்பதென்றான்.
வாளுக்கும் நாளுக்கும் ஒப்பிட்டு
வள்ளுவன் மொழிந்த குறள் தெவிட்டாத
தெள்ளமுதமன்றோ!

(நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்)

பூவுலகப்பற்றெல்லாம் துறந்து விட்டு
மேலுலகப் பற்றே தமக்கு மேன்மை யென்று
சூளுரைத்து வாழ்ந்திருந்த துறவியொருவர் - மடத்தில்
எலிகளைப் பிடிக்க பூனையொன்று வளர்க்கலானார்.
''பாவம்; பூனைக்குப் பசி யெடுத்தால்
பால் தர வேண்டும்'' என்று பசு மாடு வாங்கச் சொன்னார்.
மாடுதனைப் பராமரிக்க மங்கை யொருத்தி வந்துதித்தாள் -
பக்தி
ஏடுகளைப் புரட்டும் சாக்கில் பலகணியைத் திறந்து வைத்தார்.
அவளோ பசுவுக்குத் தீனி போட்டாள் துறவிக்கு வைத்த
பாலுக்கும் அருகில் வந்து ஜீனி போட்டாள்.
கண்ணோடு கண்ணினை நோக்கொக்கின்
கரங்களிரண்டும் காதல் கொக்கி ...
ஒன்றின் மேல் பற்று வைப்பின் - அது
மென்மேலும் பற்றுகளைப் பெருக்கிவிடும் என்று

வள்ளுவன் துறவுக்குச் சொன்னான் வளமான கருத்து
துறவியொருவர் துறவறம் துறந்த கதையில் முடிந்தது.

(இயல்பாகும் நோன்பிற்கென்று இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து)

வானமும் வசப்படும் என்கின்றோம்
வளர்ந்து வரும் விஞ்ஞான வேகம் கண்டு!
இரண்டாயிரம் ஆண்டின் முன்னே வள்ளுவன்
இதற்கோர் குறளை வரைந்து விட்டான்
ஏற்படும் அய்யங்கள் அனைத்தையும்

ஏற்றதோர் ஆராய்ச்சி செய்து தீர்ப்போம்.
வானம் நம்மருகில் வந்து விட்டதாக
வற்றாத ஊக்கம் பெருகிடப் பார்ப்போம்!
தொலைநோக்கு திறன் கொண்ட நம்
தொன்மை நூல் குறள் என்பது மெய் தானே!

(ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து)

வற்றாத செல்வம் என்பதற்கு நம் வள்ளுவ ஞானச்
செல்வம்

வழங்குகின்ற விளக்கம் தான் என்ன சொல்வேன்!
நன்மைக்குப்

பங்கம் விளைக்கின்ற தீய ஆசைகளை விட்டு விட்டால் -
அதுவே

சங்க நிதி பதும நிதி எனும் பெறற்கரிய
பெருஞ்செல்வமாகும்.

(வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்)

இயற்கை நிலையை மாற்றுதற்கு
எப்பாடு பட்டும் உழைக்கின்ற மனிதர்களை
செயற்கை நிலை சில நேரம் கை விட்டு விடும்போது

''ஊழற்பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறு'' மென
இயற்கை நிலையே முதன்மையாக வென்று நிற்கும்.

ஊழ் என்று அதற்கொரு பெயர் உரைக்கின்றோம் - அந்த
ஊழையும் உப்பக்கம் காண்பதற்கு வாரீர்!

உலைவின்றித் தாழாது உஞற்றுபவர் வாரீர்!
நிலைகுலையா நெஞ்சினரே வாரீர்!

வங்கம், இந்து, அராபி எனும்
தங்க மகளிர் தரங்கம் பாடி
அங்கமெலாம் அழகு சூடி
சங்கத் தமிழர் நாடு தேடி

சிங்க மறவர் தோளினை நாடி
இங்கு வந்தனர் குமரிக்கோடி!

முக்கடல் சங்கமம் - பெண்கள்
நெற்றியில் குங்குமம்
மேனியில் சந்தனம் புனுகு
மினுக்கும் பொன்னகை புன்னகை

அந்தப்புன்னகை புயலென மாறுமுன்னே
கயல் எனும் விழிகளில் கண்ணகி தோன்று முன்னே

ஊழையும் உப்பக்கம் காண்பதற்கு
உலைவின்றித் தாழாது உஞற்ற வாரீர்!

உடன் வாரீர்! உங்கள் உடன் பிறப்பு
அழைக்கின்றேன்; உடன் வாரீர்! உடனே வாரீர்!

★★★

## *திருவள்ளுவர் சிலை அமைத்த மாண்புமிகு முதல்வர் பல்லாண்டு வாழியவே!*

மரியாதைக்குரிய ஐயா,

996-997-ஆம் ஆண்டு முதல் ஆயிரம் ஆண்டுகள் முடிவுறும் வேளை. அந்த சோழப் பேரரசனும் அப்படித்தான் சிந்தனை வயப்பட்டிருக்க வேண்டும். நம் வழி வந்தோருக்கு, வரும் தலைமுறையினருக்குத் தமிழனின் தனிச்சிறப்பின் அடையாளமாக நாம் ஏதாவது விட்டுச் செல்ல வேண்டும் என்று அந்த ராஜராஜ சோழனின் சிந்தனை செயல் வடிவம் பெற்ற போது உருவான மகோன்னதப் படைப்பே பார்புகழும் தஞ்சை பெரிய கோயில்!

இரண்டாம் ஆயிரம் ஆண்டுகள் முடியும் தருணம். தமிழ்நாட்டில் இன்னமொரு சோழர் கோலோச்சும் காலம். இவரும் ஒரு வரலாற்று நாயகர். இவரும் இப்படித்தான் நினைத்திருக்க வேண்டும். 'தமிழின் வளமையை, தமிழன் பெருமையை பின் வரும் தலைமுறையும், அகில உலகமும் கூட உணர்ந்து வியக்கும் வண்ணம் ஒரு நினைவுச்சின்னம், நாம் அமைக்க வேண்டுமே! அவர் எண்ணங்கள் உயிர் பெறவும் தமிழகத்தின் தெற்குக் கோடியில் கடலின் மடியில் விண்ணைத் தொடுவது போன்று ஒரு பிரும்மாண்ட திருவள்ளுவர் சிலை!

முதல் ஆயிரம் ஆண்டின் முடிவில் நான் இருந்தேனா, இருந்திருந்தால் எவ்வடிவில் இருந்தேனோ எதுவும் தெரியாது.

ஆனால் இன்று நான் நிஜம். இருக்கிறேன். இந்த வரலாற்று நாயகர் சோழப்பெருமகனார் வாழும் சமகாலத்தில் வாழ்வதில் பெருமைப் படுகிறேன்.

ஏ.வி. ராஜகோபால்

(ராஜ் - சிறுகதை எழுத்தாளர்)

வளசரவாக்கம், 42, காமகோடி நகர் 4-வது குறுக்குத் தெரு, சென்னை,

# இட ஒதுக்கீடு

- ச. சாவர்க்கர், இ.ஆ.ப.,
ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 34.



1. ஆசை கொண்டேன் ஆர்வம் கொண்டிலேன்
அசையாமல் இருந்திட்டே ஆதாயம் தேடுகிறேன்
பாசம் காட்டவில்லை பாசாங்கு காட்டுகிறேன்
நாசம் அடைகிறேன் நாள் தோறும் வாடுகிறேன்.

2. உண்மையை அறியாமல் ஒப்பிட்டுப் பார்க்கின்றேன்
எண்ணிறந்த நன்மைகள் கிடைத்தாலும் ஏங்குகின்றேன்
என்னுடைய தகுதிக்குப் போதாவென் றெண்ணுகின்றேன்
என்றுதான் உண்மையை அறியப் போகின்றேன்?

3. முன்வினையை எண்ணாமல் முந்திவிட முனைகின்றேன்
பின்வினையிலும் பின்னடைவே பெற்று வருகின்றேன்
குருவருளைத் தேடாமல் குற்றமே கூறுகின்றேன்
திருவருள் நினைத்தாலே தெளிவினை அடைந்திடுவேன்.

4. கடைத்தேறும் வழியினைக் கண்டு கொண்டேன்
கடைக்கண் பார்வை பெறுவதற்கு விழைகின்றேன்
கடைசியில் வந்தாலும் முந்துவதற்கு முயல்கின்றேன்
கட்டாயம் நிகழும் கட்டத்தில் நிற்கின்றேன்.

5. பரஞானம் இருந்தாலும் நெருங்காமல் தோற்கின்றேன்
பரமபதம் அடைவதற்குப் பக்குவமும் பெற்றிலேன்
இருந்தாலும் எளியேனை ஏற்றிவிட வேண்டுகிறேன்
இடஒதுக்கீடு செய்து இணைத்திட இறைஞ்சுகின்றேன்.

★★★

# ஸ்ரீவில்லிபுத்தூரும் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாளும்

- முனைவர் வை. பழநிச்சாமி இ.ஆ.ப,
தலைவர், தமிழ்நாடு உப்பு நிறுவனம், சென்னை - 600 002.

(ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெற்ற திருப்பாவை விழாவில் ஆற்றப்பட்ட உரையாகும் இது)

பெருமை மிகுந்த ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஆண்டு தோறும் சிறப்பாகக் கொண்டாடப்படும் திருப்பாவை விழாவிலே கலந்துகொள்வதில் நான் அளவில்லாத மகிழ்ச்சி அடைகிறேன்.

மானுட வாழ்க்கையை நெறிபடுத்தக்கூடியதும், நேர்படுத்தக்கூடியதுமான மதம்-ஒரே பரம்பொருளை வெவ்வேறு வழிகளில் சென்று அடையலாம் என்று எடுத்துக்காட்டும் வகையில் பல மதங்கள் தோன்றினாலும், நால்வர் பாடிய சைவமும், ஆழ்வார்கள் பாடிய வைணவமும் இந்து மதத்தில் இரு கண்களாகத் திகழ்கின்றது. காக்கும் கடவுளான திருமாலின் நெறியை பரப்புவது வைணவ சமயம். சைவ சமய குரவர்கள் சிவன் புகழ் பாடியும், வைணவ ஆழ்வார்கள் பெருமாளைப் போற்றியும் தமிழை வளர்த்தனர். தமிழ் வளர, சமயங்களும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து வளர்ந்தது. சைவர்கள், உலகம் 36 தத்துவங் களால் ஆகியது என்பர். உலகம் 24 தத்துவங்களால் ஆகியது என்பர் வைணவர். சைவ சமயம் கூறும் 36 தத்துவங்களில் முதற்கண் உள்ள 24 தத்துவங்கள் வரையும் சைவமும் வைணவமும் இணைந்தே கருத்து வழங்குவதைக் காணலாம்.

ஞானம் தோன்றுவதற்கு நிலையாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளாகிய அறிவுக் கருவிகள் ஐந்து.

இவ்வைந்தின் வழி தோன்றியதாகிய ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை எனும் புலன்களாகிய தன் மாத்திரைகள் ஐந்து. தன் மாத்திரைகளின் வெளிப்பாடாகிய (மண்), நீர், நெருப்பு(தீ), காற்று, ஆகாயம் (விண்) என பஞ்சபூதங்கள் ஐந்து. அறிவுகருவிகளைப் போன்று உடலிலுள்ள தொழிற்கருவிகளாகிய வாக்கு, பாதம், பாணி, எருவாய், கருவாய் ஆகியன சேர்ந்து இவ்விருபதும் புறக்கருவிகள் எனப்படுகின்றன. இவ்விருபதோடு, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் உட்கருத்துக்களாம் அந்தக் கரணங்கள் நான்கையும் கூட்டத் தத்துவங்கள் 24 ஆகும்.

துவைதம், அத்வைதம் என்று இரு வேறு வழிகளில் இறைத் தத்துவங்கள் வெளிப்பட்டபோது, விசிஷ்டாத்வைதம் என்ற மூன்றாவது கோட்பாட்டை முன்வைத்தது வைணவ சமயம். அதாவது இறைத் தத்துவங்கள் மூன்று எனவும், அசித்தும், சித்தும் ஈஸ்வரனுக்கு உடலாகின்றன என்று வைணவம் கூறுகிறது.

இறைவன் அவதார நிலை பற்றி ஆராய்ந்தால், இறைவன், தேவர், விலங்கு, தாவரம் முதலிய உருவத்தைத் தன் விருப்பினால் ஏற்றுக்கொண்டு வருவது அவதார நிலையாகும். அவன் சில நோக்கங்களுக்காக மண் ணுலகில் தோன்றுகின்றான். இறைவன் அவதாரம் எடுப்பதன் நோக்கம் மண்ணுலக மக்களைத் திருத்தி, அடிமைக் கொள்வதெற்கென்றும், நல்லவர்களை காத்தல், தீயவர்களை அழித்தல் எனவும் சொல்லப்பட்டுள்ளன. இறைவன் எடுத்த அவதாரங்கள் பல. இறைவன் அவதாரங்கள் பத்து சிறப்பாக இலக்கியங்கள் குறிப்பிடப்படுகின்றன. மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், குறளன், பரசுராமன், ராமன், பலராமன், கிருட்டிணன், கல்கி என்பன. இவற்றுள் கல்கியின் அவதாரம் இன்னும் நிகழவில்லையாம்.

அவதார நிலையில் பெருமாள் உலகினர்க்கு இணையான திருமேனியோடு தோன்றித் தன்னை வழியாகப் பற்றினோர்களுக்கு இன்பப் பொருளாகவும், மேலான இறையன்புடையோர்க்கு எல்லாவித இன்பமுமாகவும் இருக்கின்றான். அவ்வாறு இப்பூவுலகில் அவதரித்தவர்தான்

ஸ்ரீ ஆண்டாள்.

''மின்னனைய நுண்ணிடையார் கூந்தலில் நுழைந்த வண்டு இசைபாடும் வில்லிப்புத்தூர்'' என்று பெரியாழ்வாரால் புகழப்பெற்ற ஊர் ஸ்ரீ வில்லிபுத்தூர்.

''கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடம் தோன்றுமூர் - நீதியால்
நல்லபத்தர் வாழுமூர் நான்மறைகள் ஓதுமூர்
வில்லிபுத்தூர் வேதக் கோனூர்''

# கடவுளின் திருவடி இன்பமடா!

**- முனைவர் த. அமிர்தலிங்கம்**

எதுவந்த போதும் கலககம் கொள்ளாதே
எல்லாம் நமக்கே இன்பமடா!
துயர்வந்த போதும் துயரம் கொள்ளாதே
அதுவும், நமக்கே இன்பமடா!

(எதுவந்த)

ஆண்டவன் இங்கு ஆண்டியும் ஆனால்
அதுவும் ஒருவகை இன்பமடா!
ஆண்டியும் வென்று அரசனும் ஆனால்
அதுவும் ஒருவகை இன்பமடா!
வண்டியும் ஓர்நாள் ஓடத்தில் ஏறும்
வள்ளுவன் சொன்ன வாய்மையடா!
ஓடமும் ஓர்நாள் வண்டியில் ஏறும்
வருவது எதிர்கொள்ளல் இன்பமடா! (எதுவந்த)

கல்வியும் தொழிலும் வளமும் நலமும்
வளர்ந்தால் அதுமிக இன்பமடா!
இல்லறம் வாழ்க்கை மனையறம் மக்கள்
சிறந்தால் அதுவும் இன்பமடா

அனுதினம் உழைத்தும் ஏழ்மை சூழ்ந்தால்
ஏற்றிடு அதுவும் இன்பமடா
சுயநலம் இன்றிப் பிறர்க்கென உருகும்
தியாகம் பெரும்பேர் இன்பமடா!

(எதுவந்த)

நெருநல் உளனொருவன் இன்றில்லை இதனைப்
பெருமை என்றாரே வள்ளுவரே!
இடுக்கண் வருங்கால் நகுக என்றாரே
குமரியில் நின்ற கொற்றவரே!

அலைந்திடும் உடலம் படுக்கையில் படுத்தால்
அதுவும் ஒருவகை இன்பமடா!
காயத்தில் கலங்கும் ஆவியும் பறந்தால்
கடவுள் திருவடி இன்பமடா! - அது
முடிவில்லாத இன்பமடா! (எதுவந்த)

ஸ்ரீ வில்லிப்புத்தூரின் பெருமையை இந்த வெண்பாப் பாடல் சிறப்பாகத் தொகுத்து வழங்கிடக் காணுகின்றோம்.

ஆதியில் ''வில்லி'' என்ற மன்னன், பெருமாள் கனவில் கூறிய கட்டளையின்படி, காட்டை அழித்து உண்டாக்கிய புத்தூர் என்பதால் இவ்வூருக்கு ''வில்லி புத்தூர்'' என்று பெயர் வந்ததாகத் தலபுராணம் கூறுகின்றது.

''காலநேமி'' என்று அரக்கனைச் சக்ராயுதம் ஏவி சம்ஹாரம் செய்தார் மஹாவிஷ்ணு. பின்பு கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய மூன்று புண்ணிய நதிகளையும் வரைவழைத்துத் தன் சக்ராயுதத்தைத் தூய்மைச் செய்து கொண்டார்.

கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய மூன்று புண்ணிய நதிகளும் ஒன்றிணைந்து உண்டான''திருமுக்குளத் தீர்த்தம்'' இவ்வூரில் புகழ் வாய்ந்ததாகத் திகழ்கின்றது.

மிகப் பழங்காலத்தில் வராகசேத்திரம் என்று புகழப்பெற்றது இத்திருத்தலம். வராகவடிவில் திருமால் இங்குத் திகழ்ந்தபோது, திருமகள், இத்திருத்தலத்தில் தாம் ஆண்டாளாக அவதாரம் செய்ய விழைவதாகக் கூறினார்.

திருமாலும் அதற்கு இசைந்து கருடாழ்வாரை முதலில் பெரியாழ்வாராக இப்புண்ணிய தலத்தில் திரு அவதாரம் செய்ய விழைவகாகக் கூறினார்.

பெரியாழ்வார் அவதாரம் செய்து இங்கு எழுந்தருளியிருக்கும் வடபத்ர சாயி இறைவருக்கு நந்தவனக் கைங்கரியம் செய்யும் பொழுது அந்த அழகிய நந்தவனத்தில், திருத்துழாய்ச் செடியின் அடியில் ஆடிப்பூர நன்னாளில் இவ்வுலகம் உய்ய திரு அவதாரம் புரிந்தவர் தாம் இன்று நாம் விழா கொண்டாடிப்போற்றும் ஆண்டாள் நாச்சியார் ஆவர்.

ஆழ்வார்கள் பன்னிருவரில் பெரியாழ்வார், ஆண்டாள் ஆகிய இருவரும் தந்தையும் மகளுமாகத் திரு அவதாரம் புரிந்த பெருமை மிகுந்த திருத்தலம் இந்த ஸ்ரீவில்லிபுத்தூர் என்பதால் தான் வைணவர்கள் கொண்டாடி மகிழும் திவ்வியதேசங்களில் இந்த வில்லிப்பூத்தூர் ஒப்பற்ற திருத்தலமாகத் திகழ்ந்து வருகின்றது.

''நற்றமிழால், நூல் செய்து நாட்டை உய்த்த''

ஏனைய ஆழ்வார்களின் அருளிச் செயல்களை விட, ஆண்டாளின் அருளிச் செயல்களுக்குத் தனி ஏற்றமுண்டு. எவ்வாறு எனில் மற்ற ஆழ்வார்கள் விஷ்ணுவைச் சித்தத்

திலே கொண்டிருக்கின்றனர். விஷ்ணுவோ ஆண்டாளைத் தன் சித்தத்திலே கொண்டிருக்கின்றார்.

''மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்று எண்ணிய எண்ணத்தினைத் திண்ணிய நெஞ்சமுடன் எடுத்துரைத்துத் திருவரங்கத்து எம்பெருமானுக்கே மணவாட்டியாய் ஆக நினைந்து அதில் வெற்றியும் பெற்ற, சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாகவும், திருப்பாவை பாடியருளிய பாவையாகவும், கோதில் தமிழ் உரைத்த கோதையாகவும் திருவில்லிபுத்தூர் கோன் எனவும், பட்டர் பிரான் எனவும் பெரியாழ்வார் எனவும் போற்றிடப்பெற்ற ஆழ்வார் தம் அன்பு மகளாகவும் விளங்கித் திகழ்ந்தவர் நம் ஆண்டாள்.

அந்த ஆண்டாளுடைய அருட்பெருமை அளவு கடந்தது. இறைவனுக்கே பணிபூண்ட ஆழ்வார்களில் ஒருவராயும், இறைவனுடைய தேவிமார்களில் ஒருவராயும் இருக்கும் சிறப்பு இவருக்கே உரியது.

ஆழ்வாராய் பாமாலை சூட்டியும், தேவியாய் பூமாலை சூட்டியும் அனுபவித்த தனி அனுபவம் ஆண்டாள் ஒருவருக்கே உடையது.

பூமாலையைத் தாம் அணிந்து பெருமாளுக்கு அணிவித்த ஆழ்வாரும் இல்லை. பாமாலையை சூட்டிய தேவியும் இல்லை.

வைணவத்திற்குத் தமிழ்நாடு தந்த தனிப்பெரும் பரிசு ஸ்ரீ ஆண்டாள். இந்த ஆண்டாள் தமிழுக்குத் தந்த பரிசு திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும் ஆகும்.

வேதாந்த தேசிகர் தன்னுடைய பாமாலையில் ஸ்ரீ ஆண்டாள் அவதரித்து சூடிக்கொடுத்த - பாடிக் கொடுத்த வைபவத்தைக் குறிப்பிடும்போது

''வேயர் புகழ் வில்லிப்புத்தூர் ஆடிப்பூரம் மேன்மேலும்
மிக விளங்க விட்டுசித்தன் தூய திருமகளாய் வந்து
அரங்கனார்க்குத் துழாய் மாலை சூடிக் கொடுத்த
மாதே! நேயமுடன் திருப்பாவைப் பாட்டு ஆறு ஐந்தும்
நீயுரைத்த 'தையொருத்திங்கள்' பாமாலை ஆயபுகழ் ஒரு
நூற்றுடன் நாற்பத்து மூன்றும் அன்புடனே அடியேனுக்கு
அருள் செய் நீயே!

என்று அருளுகின்றார்.

## திருப்பாவை எப்படிப் பட்டது?

''பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் - கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை வையம்
சுமப்பதும் வம்பு.''

கோதை தமிழ் ஐயைந்தும் ஐந்தும் என்றால் முப்பது பாசுரங்கள், திருப்பாவை முப்பது பாசுரங்களை அறியாதவர்களை இந்த பூமித்தாய் சுமக்கமாட்டாள். ஸ்ரீ வில்லிபுத்தூரிலே திருப்பாவை அறியாத ஒரு பாவையும் இருக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

இளமையிலேயே ஒவ்வொருவரும் பக்தி உணர்வு கொண்டு பக்குவப்படவேண்டும் என்பதை ஆண்டாள் அருளிய திருப்பாவை உணர்த்துகின்றது.

இந்த உலகத்தைப் படைத்து, உயிர்கள் யாவற்றையும் காத்து நிற்கும் இறைவனிடம் பக்தி ஏற்படா விட்டால், நம்மைப் பெற்றவரிடம் பக்தி ஏற்படாது. நம்முடைய தாய் நாட்டின் மேல் பக்தி உண்டாகாது.

ஆகவே தாய் தந்தை பக்திக்கும், தாய்நாட்டுப் பக்திக்கும் அடிப்படையாவது தெய்வபக்தி.

தெய்வபக்தி, பாவங்கள் புரியாதபடி நம்மைத் தடுத்துக் காக்கும். பாவங்கள் சேராதபடி யாரொருவர் தம்மைக் காத்து கொள்கிறாரோ, அவர்தாம் நல்ல காரியங்களையும் செய்யமுடியும்.

ஆகவே தான்

''பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்''

என்று திருப்பாவையின் சிறப்பை விளக்கும் வகையிலே பாடியிருக்கிறார்கள்.

''திருப்பாவை'' யிலே பக்தி உணர்வு கொண்டுள்ள இளம் பெண்கள், உறங்கிக் கொண்டிருக்கின்ற மற்ற இளம்பெண்களை எழுப்புவதாகப் பாடல்கள் இடம் பெற்றிருக்கக் காணுகின்றோம்.

தமிழுக்கு உள்ள உயரிய குணங்களில் ஒன்று ஆற்றுப்படுத்துதல். ''நான் பலன் பெற்றேன். நீயும் இவ்வாறு ஒழுகினால் பலன் பெறுவாய்'' என்று ஆற்றுப் படுத்துவது தமிழருக்கே உள்ள உயரிய குணம் ஆகும்.

திருமுருகாற்றுப்படை, பொருநர்ஆற்றுப்படை, கூத்தர் ஆற்றுப்படை, புலவர் ஆற்றுப்படை என்றெல்லாம் நம் தமிழ் மொழியில் தான் ஒப்பற்ற இலக்கியங்கள் இருக்கின்றன.

இராமானுஜர் என்ற மகானைப் பற்றி நீங்கள் எல்லாம் அறிந்து இருப்பீர்கள். திருப்பதியை நோக்கித் தம்முடைய பக்தர்களோடு சென்று கொண் டிருந்தார் இராமானுஜர்.

அவ்வாறு போகும் போது நாம் செல்லும் வழி சரியான வழிதானா? அல்லது தவறான வழியிலே சென்று கொண்டு இருக்கிறோமா என்கிற ஐயம் அவருக்கு ஏற் பட்டு விட்டது.

வழியிலே ஏற்றம் இறைத்துக் கொண்டிருந்த ஒரு விவசாயியைப் பார்த்து ''திருப்பதிக்கு எந்த வழியில் போகவேண்டும்'' என்று கேட்டார்.

இப்போது நாமெல்லாம் பேருந்தில் போவது போல, அப்போது கி.பி 12 ஆம் நூற்றாண்டிலே இராமாநுஜர் வாழ்ந்த அந்தக் காலத்திலே போக வழி இல்லை. நடந்து தான் போகவேண்டும்.

ஆகவே தீர விசாரித்துக்கொண்டு போகலாமே என்று ஏற்றம் இறைத்துக் கொண்டிருந்த ஒரு விவசாயிடம் ''என்னப்பா! இந்த வழியாகத் தானே திருப்பதிக்குப் போகவேண்டும்'' என்று கேட்டார்.

அந்த விவசாயியும் ''இந்தப் பக்கமாகப் போங் கள்'' என்று கை காட்டினார்.

கை காட்டி, வழிகாட்டிய அந்த விவசாயியை சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிட்டார் மகான் இராமா னுஜர்.

''என்ன சுவாமி! சாதாரண விவசாயியைப் போய் கும்பிடுகிறீர்களே?'' என்று மற்ற பக்தர்கள் கேட்டார்கள்.

''நமக்கு ஆண்டவன் இருக்கும் இடத்தைக் காட் டிய அவனல்லவா நமக்குக் குரு'' என்று பதில் சொன் னார் மகான் இராமானுஜர்.

ஆக திருப்பாவையும் நமக்குப் ''பரமனடி காட்டக் கூடிய'' புண்ணிய நூல். ''பாதகங்கள் தீர்க்கும், பரமனடி காட்டும்''

**ஆகவே பரமனடி காட்டக் கூடிய திருப்பாவை, இளைஞர்களைப் பக்தி நெறிக்கு ஆற்றுப் படுத்தக் கூடிய ஒப்பற்ற நூல் ஆகும். பரமன் அடி காட்டக் கூடிய தெய்வமறை நூல் ஆகும்.**

''நாமென்ன மற்றவர்களுக்கு வழி காட்டுவது?''

என்று எண்ணாமல், இதிலே இளம்பெண்கள் மற்ற மற்ற பெண்களை உறக்கத்திலே இருந்து எழுப்பி, ''பக்தி செய்வோம் வா! இறைவன் அருளைப் பெறு வோம் வா'' என்று கூறி ஆற்றுப் படுத்துகிறார்கள்.

**ஆகவே திருப்பாவை படிக்கிற பெண்களுக்கு, பக்தர்களுக்கு பிறருக்கு உதவி செய்யவேண்டும் என் கிற நல்ல குணம் உண்டாகும்.**

''எல்லே இளங்கிளியே, இன்னம் உறங்குதியோ?
சில் என்று அழையேன்மின், நங்கைமீர்
போதருகின்றேன்
வல்லை உன் கட்டுரைகள், பண்டே உன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே, நானே தான் ஆயிடுக.
ஒல்லை நீ போதாய், உனக்கு என்ன வேறுடையை
எல்லோரும் போந்தாரோ, போந்தார் போந்து
எண்ணிக் கொள்
வல்ஆனை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை, மாயனைப் பாடேலோர் எம்பாவாய்'' (15)

**சாதாரண மக்களுக்கும் புரியும் வகையிலே, பெண்கள் பேசிக் கொண்டால் எப்படி இனிமையாகப் பேசிக் கொள்வார்களோ? அப்படி எளிய, இனிய தமிழில் பாவை பாடலை ஆண்டாள் நமக்காகப் பாடியருளி யிருக்கக் காணுகின்றோம்.**

ஒரு பெண் கேட்க, மற்றொரு பெண் பதில் சொல் லுவதாக அமைத்து இறுதியில் இருவருமாகச் சேர்ந்து

''வல்ஆனை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய்''

என்று இனிய காலைப் பொழுதில் இறைவனைப் பாடு வதே கடமை என்று உணர்த்துவதாக ஆண்டாள் அருளிச் செய்திருக்கக் காண்கின்றோம்.

**''திருப்பாவை'' இலக்கியம், தமிழ் மணக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்.** ஆகவே தான் இதனை ஆண் டாளே ''சங்கத் தமிழ் மாலை'' என்று குறிப்பிட்டிருக்கக் காணுகின்றோம்.

திருப்பாவையில் பாவைகள் எல்லாம் நோன்பு இருக்கிறார்கள். அந்த நோன்பினால் உடலும், உள்ளமும் தூய்மையாவது முதற்பலனாகக் கூறப்படுகின்றது.

''வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ, பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடி பாடி
நெய் உண்ணோம், பால் உண்ணோம், நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம், மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம், தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் கைகாட்டி
உய்யுமாறு எண்ணி உகந்தேலோர் எம்பாவாய்'' (2)

## சித்திரப் பொற் சிலை திறந்தார் நம்முதல்வர் வாழியவே!

இந்தியாவில் எழிலார்ந்த இன்பம்தரும் கன்யாகுமரி
சிந்தைகவர் கடற்கரையில் சிறந்தொளிரும் வித்தகராம்
கந்தன்நிகர் கட்டழகர் கருணைவிவே கானந்தர்
அந்தண்மை அமைதிவிளை மண்டபத்தின் அருகினிலே

உத்தமருள் உத்தமனாம் ஒள்ளிய ஓர் மெய்ஞ்ஞானி
புத்தரைப்போல் புகழ்மிக்கோன் பூசுரனாம் வள்ளுவன்எம்
அத்தனின்நல் ஒரு நூற்று முப்பத்துமூன்று அடி உயரச்
சித்திரப்பொற் சிலைதிறக்கும் கலைஞரெனும் கருணாநிதியே!

உலகேத்தும் உத்தமனே! உயர்பருதி போலுலகுப்
பலகலையும் பலதொழிலும் பாங்குடனே ஓங்கிடவும்
நலநாட்டம் நாடியிவண் நற்பணிசெய் நற்கோவே
பலநாடும் பாராட்டப் பல்லாண்டு வாழியவே.

*- முதுபெரும்புலவர் ஆ.ஜெ. இராமசாமி*
*18, பார்த்தசாரதி வீதி,*
*வேளாளர் தேனாம்பேட்டை,*
*கோபாலபுரம், சென்னை - 86.*

தினமும் மாணவ மாணவியருக்கு வைகறையில் எழும் பழக்கம் உண்டாக வேண்டும். நீங்கள் மற்ற நேரங்களில் படிப்பதை விட அதிகாலையில் படிப்பீர்கள் ஆனால் படித்தது பசுமரத்தாணி போல் பதியும். ஆகவே தான் காலை 4.30 மணி முதல் 6 மணி வரை உள்ள நேரத்தைப் பிரம்ம முகூர்த்தம் என்று நமக்கு நம் ஆன்றோர்கள் உணர்த்தியிருக்கிறார்கள்.

இந்த பிரம்ம முகூர்த்தத்திலே எழுந்து படிக்கிற மாணவியர்கள்தான் தங்கப் பதக்கம் வாங்கக் கூடிய மாணவியர்களாகத் திகழ்வார்கள்.

ஆகவே இப்படிப்பட்ட ஒரு நல்ல பழக்கத்தை நாம் உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்பதை இந்தப் பாடல் நமக்கு உணர்த்திடக் காண்கின்றோம்.

சிலர் சீக்கிரம் எழுந்துவிடுவார்கள். ஆனால் தங்களை அலங்காரம் செய்து கொள்வதிலேயே அதிக கவனம் எடுத்துக் கொண்டு ''காலம் பொன் போன்றது கடமை கண் போன்றது'' என்பதை மறந்து செயல்படுவார்கள்.

அப்படி காலத்தை வீணடிக்காது, கடமை ஆற்ற வேண்டும் என்பதையும்

''நாட்காலே நீராடி மையிட்டு நாம் எழுதோம்,
மலரிட்டு நாம்
முடியோம் செய்யாதன செய்யோம்''

என்ற பாடல் வரிகள் உணர்த்திடக் காணுகின்றோம்.

சிலருக்கு இவர் அப்படி, இன்னார் அப்படி, என்று கோள் சொல்லுவதே வாடிக்கையான கலையாக இருக்கும்.

''ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு''

என்பது திருக்குறள்.

நீ மற்றவர் மேல் குற்றம் கூற ஒரு விரலை நீட்டினால், உன் குற்றத்தை முதலில் சரி செய்து கொள் என்று மற்ற 4 விரல்கள் உன்னையே நோக்கி இருக்கவும் நீ காண்பாய்.

ஆகவே தீமையான புறங்கூறல் கூடாது. ''தீக்குறளைச் சென்று ஓதோம்'' என்று புறங்கூறலைக் கடிந்து கூறுகிறார் ஆண்டாள்.

இயன்றவரை பிறருக்கு உதவி செய்து வாழ்வது நம் கடமை.

''ஐயமும், பிச்சையும் ஆம்தனையும் கை காட்டி
உய்யுமாறு எண்ணி உகந்தேலோர் எம்பாவாய்''

உயர்ந்தவருக்குத் தருவது ஐயம்,
தாழ்ந்தவருக்கு இடுவது பிச்சை

இதனை ஒவ்வொருவரும் மேற்கொண்டு வாழ்வதே - நம்மை நாம் நெறிப்படுத்திக் கொள்வதே நோன்பு என்று தெளிவுபடுத்துகின்றது திருப்பாவை இலக்கியம்.

''வையத்து வாழ்வீர்காள்'' என்ற இத்திருப் பாவை பாடல் பாடி இவ்வாறு நோன்பிருந்தால் உண்டாகும் பலன்கள் :

1. நாட்டுக்கு மழைபொழிதல் ஒன்று
2. நல்ல வாழ்க்கைத் துணை அமைவது மற்றொன்று.

இன்றைக்கு மழை பொழியாமல் நீர் நிலைகள் வற்றிப் போகும்போது தான் அடடா ''தண்ணீருக்குத் தவிக்க வேண்டும் போலிருக்கிறதே! என்று கவலைப்பட வேண்டியிருக்கிறது. (மார்கழி நீராடலால் தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்யும் என்பதைச்சூடிக் கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள் திருப்பாவையில்

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகளப்

பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்'' (3)

என்று பாடியிருக்கக் காண்கின்றோம்.

நம் முன்னோர்கள்-அருளாளர்கள். அறிவுறுத்திய வாறு மாணிக்கவாசகரையும் ஆண்டாளையும் நாம் வேண்டி தினந்தோறும் திருப்பாவையையும், திருவெம் பாவையும் ஓதி மழை வேண்டி வழிபாடு செய்தால் பெய்யத் தவறிய பருவ மழை பெய்து, நீர் நிலைகள் நிறைந்து நம்மைக் காப்பாற்றும் என்பது திண்ணம் ஆகும்.

மழை தீங்கின்றிப் பெய்ய வேண்டும். ஒரிசா விலே பல்லாயிரக்கணக்கான மக்கள் தவிக்க நேரிட்டது போல் பெய்யக் கூடாது.

கார்மேக வண்ணன் நிறம் போல் கருத்து, அவன் சுதர்சன சக்கரம் போல மின்னி, வலம்புரி போல் இடி முழங்கி, சார்ங்கம் எனும் வில்லிலிருந்து அம்பு புறப் படுவது போல உலகம் வாழ மழை பெய்ய வேண்டும் என்று பாடியுள்ள திருப்பாவை பாடல் அற்புதமானது.

''ஆழி மழைக் கண்ணா! ஒன்றும் நீ கைகரவேல்
ஆழியுள்புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடை பத்மநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்''

ஆண்டாளைப் போலவே மாணிக்க வாசகரும் திருவெம்பாவையில் மேகம் பராசக்தியின் மேனி வண் ணம் போல் கருமைகொண்டு, சிற்றிடை போல் மின்னல் உண்டாகி, அன்னையின் பொற்சிலம்புகள் முழங்குவது போல் இடி முழங்கித் திருப்புருவம் போல் வானவில்லும் தோன்ற, பராசக்தியின் திருவருள் போல் பாரெல்லாம் உய்ய மழை பொழிய வேண்டுமென்று பாடியுள்ளார்.

இத்தகைய மழை போன்ற கருணை உள்ளம் நமக்கு உண்டாகத் திருப்பாவை நாளும் ஓத வேண்டும். இறைவழிபாடே ஞானத்தைக் காக்கும். மார்கழி நீராடி எல்லாம்வல்ல இறையருளால் மாநிலம் தழைக்க மழை யும் நம் இல்லம் தழைக்க இனிய வாழ்வும் பெற்று உய்வு அடைவோமாக!

இதனால் வீடும் நாடும் வாழும் எனக் கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன், நன்றி! வணக்கம்!

★★★

## அருள்மிகு ஆண்டாள் (நாச்சியார்) திருக்கோயில் மகாசம்ப்ரோட்சணம்

வரும் 10.2.2000 அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு ஆண்டாள் (நாச்சியார்) திருக்கோயில் மகாசம்ப்ரோட்சணம் மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது. பக்தர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்துகொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீவடபத்ர சயினர், அருள்மிகு ஆண்டாள், அருள்மிகு ரங்கமன்னார் திருவருளைப் பெற்றுய்ய வேண்டுகின்றோம்.

# "ஒரு வாசகமென்று உணர்"

"சித்தாந்த ஞாயிறு" டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி,
சிங்கம்பட்டி

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவைத்
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசக மென்றுணர்"

- ஔவையார்

சான்றோர்கள் வெவ்வேறு கால நிலைகளில் வாழ்ந்திருந்தாலும் அவர்களுடைய திருவாக்கு அருள்வாக்காக அமைந்து, வேற்று மொழிகளில் இருந்தாலும் கூட, ஒத்த உணர்வும் மற்றும் அர்த்தமுடையதாக இருப்பதைக் காண முடிகிறது எனலாம்.

"ஏழைக்கு உதவுகிறவனுக்கு ஆண்டவன் கடனாளியாகிறார்" என்ற ஏசுபிரான் வாக்கிற்கிணங்க வள்ளுவர்

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி" குறள் : 226

என்கிறார்.

"ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றை பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றை பிடிக்கும் கணக்கறி வாளர்க்கு
கூற்றை உதைக்கும் குறியதுவாமே"

- திருமந்திரம்

இதற்கு இணையாக வள்ளுவர்

"கூற்றம் குதித்தலும் கை கூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வருக்கு". குறள் : 269

என்கிறார்.

"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின் னுரைதானே

என்ற திருமந்திரத்திற்கு இசைவாக

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" குறள் : 100

என்று திருக்குறள் கூறுகிறது.

"பஞ்சத் துரோகத்துப் பாதகர் தம்மையும்
அஞ்சச் சமயத்தோர் வேந்தன் அருந்தண்டம்
விஞ்சச் செய்திப்புவி வேறே விடாவிடின்
பஞ்சத்து ளாய்ப்புவி முற்றும்பா ழாகுமே"

- திருமந்திரம்

என்ற கருத்திற்கு இசைவாக

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"

- குறள் : 550

என்கிறது குறள்.

"வைத்த பசுபாச மாற்று நெறிவைகிப்
பெத்த மறமுத்த னாகிப் பிறழ்வுற்றுத்
தத்துவ முன்னித் தலைப்படா தவ்வாறு
பித்தான சீடனுக் கீயப் பெறாதானே"

- திருமந்திரம்

என்ற திருமந்திரத்திற்கு இசைவாக

"அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தார்
அல்லார் முன் கோட்டி கொளல்"

- குறள் : 720

என்கிறது குறள்.

"ஆற்றரும் நோய்மிகும் அவனி மழைகுன்றும்
போற்றரும் மன்னவர் போர்வலி குன்றுவர்
கூற்று உதைத்தான் திருக்கோயில்கள் எல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே"

என்ற திருமந்திரத்திற்கு இசைவாக

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்கு மேல் வானோர்க்கும் ஈண்டு"

குறள் : 18

என்கிறது திருக்குறள்.

"எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" என்கிறார் ஔவைப் பாட்டி.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு."

குறள் : 392

என்கிறது குறள்.

மேலே குறிப்பிட்ட சில பாடல்கள் எப்படி ஒரு பொருள் கொண்டதாக இருக்கிறதோ அதேபோல் கீழே இனி குறிப்பிடும் பாடல்களும் ஒரே பொருளை ஐயம் இன்றி குறிப்பிடுவதைக் காணலாம்.

''காலதூதாள் எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட, அகன்று புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோட''

என்பது தேவராய ஸ்வாமிகள் இயற்றிய ''கந்தர் சஷ்டி கவசம்''

பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள்
பக்கமுண்டெக்காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்தமாக யமபடரெனுந்திமிர
மணுகாக் கதியுண்டு''

என்பது - தாயுமான ஸ்வாமிகள் அருளியுள்ள ''மலைவளர் காதலி'' ஆகும்.

யமதூதர் சுடுவெட்டு பிளவென்றதட்டி
எனை வெஞ்சினத் தோடொறுக் கென்று வந்தால்
நமதன்ப அஞ்சேலெனச் சக்தியேந்தி
நவிரத்தின் மிசை செந்திலாய் வந்து காவே''

- ஆதிசங்கரரின்: சுப்ரமணிய புஜங்கம்

''இழைக்கும் வினைவழியே அடுங்காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து அஞ்சலென்பாய் அத்தர்
சித்தர் எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலையாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே
என்பன்ஓடிவந்தே''

- அபிராமி அந்தாதி

''பல்லது கடித்து மீசை படபட என்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரிய மேனி எமபடர் வரினும் என்னை
ஒல்லையில் தாரகாரி ஓம் ஐம்ரீம் வேல் காக்க''

- பாம்பன் சுவாமிகள்: ஷண்முக கவசம்

"மதி நுதன் மங்கையொடு வடபாலிருந்து
மறை யோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்தென்
உளமேபுகுந்த அதனால்
கொதியுறுகாலன் அங்கி நமனோடு தூதர்
கொடு நோய்களான பலவும்
அதிகுணநல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே

- கோளறு திருப்பதிகம் பாடல் - 4
(திருஞானசம்பந்தர் பதிகம்)

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் நடலையல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லா தன்மையான
சங்கரன் நற்சங்க வெண்குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர் சேவடி இணையே குறுகினோமே.

- திருநாவுக்கரசு ஆறாம் திருமுறை

மேற்குறிப்பிட்ட பாடல்களும் அவைகளை இயற்றியவர்களும் சாதாரணப்பட்டவர்கள் அல்ல. ஆண்டவனைக் காட்சி பிரமாணமாகக் கண்டவர்கள். அவர்கள் கண்டதை நாம் யாரும் மாசு கற்பிப்பது தகாத செயலாகும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்நிலையில் வள்ளுவர் குறிப்பிடுவது போல்

''ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல'' (குறள்: 337)

என்பதற்கிணங்க நிலையாமை என்பது எப்போதும் தலைக்கு மேலேயே நமக்கு இருக்கிறது என்பதில் ஐயப்பாடு வேண்டாம். யமப்படர்கள் கையில் சிக்காமல் நமக்கு சாலோகமாவது கிட்ட வேண்டுமே? அதற்கு நாம்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'' (குறள்: 50)

என்னும் வள்ளுவர் வாக்கிற்கு ஏதுவாய் வாழ்ந்து வீடு பேறு அடைய வேண்டுமே! வாழ்நாள் முழுவதும் பெண்டு பிள்ளைகளை நிறைவு செய்யவும், கேளிக்கைகளில் ஈடுபடவும், அரட்டை அடிக்கவும் நேரத்தை வீணாக்கினால் எமதூதர் காலாள் கையில் அல்லவோ அகப்பட நேரிடும்.

கடந்த ஜூலை மாதம் தூத்துக்குடியில் பழமையான ஒரு சைவசித்தாந்தக் கழகம் எனக்கு ''சிவஞான சித்தர்'' என்ற பட்டம் வழங்கி சிறப்பித்தது. விழா சிறக்க பல மேதைகள் என்னைப் பாராட்டிப் பேசினார்கள். அதில் ஒரு நண்பர் நிந்தா ஸ்துதி என்ற அடிப்படையில் என்னைப் பாராட்டி, இவர் அரச பரம்பரையைச் சார்ந்தவர், புலன் இன்பத்திற்கு அடிமையான பரம்பரை, இவருக்கு எப்படி இந்த சிறப்புப் பட்டத்தை வழங்கினீர்கள்? என்று வேண்டுமென்றே பாராட்டும் வகையில் வியப்புடன் கேட்டார்.

நண்பர் கேட்டதில் தவறில்லை. அதனை ஏற்கிறேன். உண்மை, நான் அதுபோன்ற கூட்டத்தைச் சார்ந்தவன் தான். ஆனால் ஒன்றை மட்டும் வாசகர்கள் முன் பணிவுடன் தெரிவிக்க விரும்புகிறேன். எனக்கு முன் ஜென்ம நினைவுகள் சில நிழலாடுகிறது. நான் எழுதியிருப்பது முழுவதும் உண்மை. அறுதியிட்டுக் கூற முடியும்.

கருட புராணத்தை ஒருவர் வாங்கிப் படித்தால் நான் இங்கு குறிப்பிட்டதெல்லாம் புலப்படும்.

"உடலில் துலக்கிய வேடம் உயிர்க்காக
உடல் கழன்றால் வேடம் உடனே கழலும்
உடல்உயிர் உண்மையிதென்று ஓர்ந்து கொள்ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டை யொத்தாரே''

- திருமந்திரம்

★★★

# சூரியனார் அருள்வழங்கும் ரதஸப்தமி விரதம்

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

முன்னொரு காலத்தில் ராஜா ஒருவருக்கு நீண்ட நாள் பிள்ளைச் செல்வம் இல்லாமல் இருந்து ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால் அக்குழந்தை பிறந்தது முதல் வளர வளர நாளொரு நோயும், பொழுதொரு கண்டமு மாக தினம் தினம் இறந்து பிழைப்பதாக நடந்து வந்தது.

அரசன், ஜோதிட நிபுணர்கள் மூலம் அவள் ஜாதகப் பலனை அறிந்தான். ஜோதிடர்களும் 'இவள் போன ஜென்மத்தில் நல்ல குலத்தில் பிறந்தாலும், குலப் பெருமையைக் காக்காமல், வைஸ்யன் ஒருவனுடன் உறவு கொண்டு, அவன் இறந்த பின் அவன் மனைவி யைப் படாதபாடுபடுத்தி, அவளுடைய சொத்து, நகை கள், உரிமைகள் பலவற்றை அபகரித்து அவளை அடிமை யைப் போல் நடத்தியுள்ளதுடன், மேலும் பல பாபங்கள் செய்திருக்கிறாள். இருந்தாலும் அவள், 'ரத ஸப்தமி விரதம்' செய்தவர்களைப் பார்த்து, நாமும் இவ்வாறு செய்ய வேண்டும் என்று மனத்தளவில் நினைத்தாள். ஆதலால், இப்பிறவியில் ராஜாவான உங்கள் வயிற்றில் பிறந்து, பாவங்களைத் தொலைத்து நற்கதி அடைய அவளது கிரகங்கள் அமைந்துள்ளது. திருமணமாகியும் தன் கணவருடன் சேராமல் நோய் படுத்துவது என்பது, போன ஜென்மத்தில் வைஸ்யனை மயக்கி, அவன் தன் மனைவியைப் பார்க்காமல், பேசாமல் செய்ததினால் வந்த கர்மவினையேயாகும். அதனால் இவ்விரதத்தை அவளுக்கு செய்துவைத்து பூர்த்தி செய்தால் அவள் பாவம் விலகி, சிறப்பாக நீண்ட ஆயுளுடன் நோய் நொடி இல்லா மல் சௌமங்கல்யத்துடன் புத்திர பௌத்திரர்களுடன் அனைத்து நலன்களைப் பெற்று வாழ்ந்து நற்கதி யடைந்து, வைகுண்டப் பதவியையும் அடைவாள்' என்று கூறலானார்கள்.

அரசனும் 'ரதஸப்தமி' விரதம் செய்யும் விவர மும் கேட்டு அறிந்து, அதன்படி கிரமப்படி அனுஷ்டித்து, பூஜைகள் செய்து, விரத பூர்த்தி செய்ததில் அவர் மகள் நோய் குணமடைந்து, கணவருடன் இல்வாழ்க்கை வாழ்ந்து, புத்திரர்கள், பௌத்திரர்களுடன் வாழ்ந்து சொர்க்கப் பதவியையும் அடைந்தாள்.

இவ்விரதம் 'புஷ்யபகுள' தசமி முதல், 'மாகசுத்த' ஸப்தமி வரை அதிகாலையில் எழுந்து சுத்த நீரில் நீராடி, சூரிய நமஸ்காரங்களைச் செய்து, பால் சாதம் கலந்து நிவேதித்து, அவ்வன்னத்தையே, அவள் உண்டு வர வேண்டும். அதாவது தை மாத பௌர்ணமிக்குப் பின் வரும் தசமி முதல், தை அமாவாசைக்குப் பின்வரும் ஸப்தமி வரை விரதமேற்பதாகும். ரதஸப்தமி அன்று வெள்ளி, தங்கம் இவைகளால் ரதம் போல் செய்து, சூரியன் சந்திரன் படம் வெள்ளித் தகட்டில் இரண்டு ஜதைகளில் (நான்கு தகடுகளில்) வரைந்து ரதத்தில் வைத்து அதைப் பூசித்து, சர்க்கரைப் பொங்கல், வடை யுடன் பன்னிரண்டு வகை இனிப்பு வகைகளுடன் நிவேதித்து, சோடசோபசாரங்களுடன் பூஜைகளை முடித்து பன்னிரண்டு அந்தணர்கள் அல்லது வேதம் படித்தவர்களையாவது அழைத்து அன்னம் அளித்து, இரு சுமங்கலிப் பெண்களுக்கு இப்பூசை செய்த சூரிய சந்திர தகடுகளையும் வைத்து தாம்பூலம் தர இவ்விரதம் பூர்த்தி அடையும் என்று கூறினார்கள்.


ஒரு காலத்தில் ஈஸ்வரன், தான் மட்டும் உலகங் களுக்கு பெரிய கடவாய் பிரகாசிப்பது போதாது என்று எண்ணயவராய், மற்றொரு கடவுளையும் ஏற்படுத்த எண்ணியதில், மற்றொரு கடவுளையும் உண்டாக்கினார். இதற்குத் தான் சூரியன், ஆதித்யன், பாஸ்கரன் என்று பல பெயர்கள் உண்டாயின.

தக்ஷனின் புத்திரியாகத் தோன்றிய அதிதி, மண்ணி லும், விண்ணிலும் பரவி இருக்கும்படியான ஒரு பெரிய அண்டத்தை அவள் ஈன்றெடுத்தாள். அந்த அண்டத்தி லிருந்து பன்னிரண்டு வடிவனாக சூரியன் ஆயிரம் கிரணங்களுடன் தோன்றினார். முதன் முதலில் சூரியன் ஹிரண்யகர்ப்பராகத் தோன்றிய அவரே ஆதிதேவர். ஆதலால் அவருக்கு ஆதித்யன் என்ற நாமம் உண்டா யிற்று.

ஒரு சமயம் ஜலப்பிரளயம் ஏற்பட்டது. எங்கும் நிறைந்திருக்கும் ஜலத்திற்கு 'நாரம்' என்ற பெயர் உண்டு. அந்த ஜலத்தையே தமது இருப்பிடமாகக் கொண்டதால், 'நாராயணன்' என்ற பெயரும் அவருக்கு ஏற்பட்டது.

உலகம் தோன்றுவதற்குக் காரணமாக இருப்பவர் சூரியன். ஆதி அந்தம் பிறப்பு இறப்பு ஆகிய இவை எதுவும் அப்பரம்பொருளுக்கு இல்லை. அவரை வஸ்து வாகவும் கூறுவர்; அந்த வஸ்துக்கு வாசனை, வர்ணம், ரஸமோ, சப்தமோ, ஸ்பரிசமோ எதுவும் இல்லை. அது பரப்பிரம்மத்திடமிருந்து உண்டானது; அந்த பரப்பிரம்மத் தின் உருவே சூரிய மண்டலம். அவருடைய சொரூபம் சாதாரணமாக உள்ளவர்கள் அறிய முடியாததாகும். அவ ருடைய உருவம், ஞானம், வைராக்கியம், தர்மம், ஐஸ்வர் யம் ஆகியவற்றுக்கு இருப்பிடமாக இருக்கின்றது.

சூரியனுடைய ஒளி அண்டமாகிய கோளத்தின் நடுவே இருந்துகொண்டு, நான்கு பக்கங்களிலும், மேலும் கீழும் பிரகாசித்துக் கொண்டு இருப்பதால் சுற்றி லும் உள்ள இருளைப் போக்குகின்றன. சூரியன் மிகுந்த



பிரகாசத்தையுடைய கிரணங்களால் இவ்வுலகம் முழுவதும் வியாபித்து எங்கும் பிரகாசித்து, சகல உலகங்களையும் ஒளிமயமாக்குகிறார்.

சூரியனுடைய ஆயிரம் கிரணங்கள் குளிர், மழை உஷ்ணம் ஆகியவற்றை உண்டு பண்ணுகின்றன. சூரியனுடைய கிரணங்கள் பொதுவாக தேவர்களையும், பித்ருக்களையும், மனிதர்களையும் போஷிக்கின்றன. ஔஷதிகளில் சக்தியை அளித்து அவற்றின் மூலம் மனிதர்களைக் காப்பாற்றுகிறார். ஸ்வதா என்பதில் ஸூதி என்ற அம்சத்தை அளித்து பித்ருக்களைப் போஷித்தும், அமிருதத்தை அளித்து தேவர்களைக் காத்தும் வருகிறார்.

அவரே அக்னியாகவும், பன்னிரண்டு சூரியனாகவும் இருந்து மூன்று உலகங்களையும் பிரகாசப்படுத்துகிறார். அக்னியில் ஹோமம் செய்யப்படும் பொருள் ஆதித்யனையே அடைகிறது. அவரிடமிருந்து மழை உண்டாகிறது. மழையினால் உணவுப் பொருள் பெருகி, மனிதர்கள் உயிர் வாழ்கிறார்கள்.

நீரினால் தான் சூரியன் எல்லா காரியங்களையும் நடத்துகிறார். மழையினால் தான் சூரியனுக்குப் பிரகாசம். நீரானது சூரியனுடைய வெப்பத்தை தாங்கி மேகமாகி மழையாகப் பொழிகிறது.

சூரிய மண்டலத்தைச் சுற்றி அநேக ரிஷிகள் தேவர்கள் நிலைபெற்று வாசம் செய்து, மத்தியிலுள்ள சூரியனைத் துதித்து வருகிறார்கள்.

சூரியனே சர்வ கிரகங்களுக்கும் பதியாக விளங்குகிறார். ஆதித்தன், சோமன், அங்காரகன், புதன், பிரகஸ்பதி, சுக்கிரன், சனி, ராகு, கேது ஆகிய ஒன்பது பேரும் நவக்கிரகங்கள் என்று அழைக்கப்படுபவர்கள் ஆவர். மூன்று உலகங்களிலும் ஏற்படும் சுபஅசுபங்களை எடுத்துக் காட்டும் அதிகாரிகளாக நவக்கிரகங்கள் விளங்குகின்றன. அவர்களில் சூரியனும் சந்திரனும் மண்டலக் கிரகங்கள் என்று குறிப்பிடப்படுபவர்கள். ராகு சாயா கிரகம் ஆகும். மற்ற ஆறு கிரகங்களும் நக்ஷத்திர கிரகங்கள் ஆகும். நக்ஷத்திரங்களும் சூரியனை ஆதாரமாகக் கொண்டவைகளே.

காலத்துக்கு சூரியனே தாரணமாக இருக்கிறார். க்ஷணம், முகூர்த்தம், பகல், இரவு, பக்ஷம், மாசம், ருது, வருஷம் என்ற காலப் பிரமாணங்கள் எல்லாம் அவரிடமிருந்தே உண்டாகின்றன.

காலப் பாகுபாடுகளினால் செடிகொடிகள் பயிர் பச்சைகள் வளர்கின்றன. பாகுபாடுகள் இல்லையெனில் பயிர்கள் விளையாது; பயிர்கள் விளையாவிடில், பூமியில் உள்ளவர்களும், விண்ணில் உள்ளோரும் சூரியன் இல்லாமல் ஒரு காரியமும் செய்ய இயலாது; அக்னி ஹோத்திரம் இல்லை, யாகயக்ஞங்கள் இல்லை.

சூரியனுடைய சஞ்சாரத்தின் காரணமாகவே பகல் இரவு உண்டாகிறது. உதயமாகும்போது ரிக் வேத சொரூபமாகவும், மத்தியான வேளையில் யஜூர்வேத சொரூபமாகவும், சாயங்காலத்தில் சூரிய அஸ்தமன வேளையில் சாமதேவ சொரூபியாகவும் இருக்கின்றார்.

விசுவகர்மாவின் மகள் 'ஸரேணு' என்பவள். அவளுக்கு ராக்ஞீ என்றும், ஸமுக்ஞா என்றும் பிரபாஸா என்றும் பல பெயர்கள் உண்டு. அவளே சூரியனுக்கு மனைவியாவாள். அவளுடைய நிழலே சாயாதேவி எனப்படுபவள். ஸமுக்ஞாவினால் உண்டாக்கப்பட்டவள் சாயாதேவியாவாள். நிக்ஷூபா என்றும் பிருதிவீ என்றும் பல பெயர்களில் சாயா, சூரியனுக்கு மற்றொரு பத்தினியாக இருக்கிறாள்.

சூரியனுக்கு 'ராக்ஞீ', 'த்யௌ' என்ற பெயரில் ஆகாசமாகவும், 'நிக்ஷூபா', 'பிருதிவீ' என்ற பெயரில் பூமியாகவும் இரு பத்தினிகளாக விளங்குகிறார்கள். இப்படியிருக்க அநேக யுகங்களுக்குப் பிறகு திடீரென்று சூரியனின் காந்தி குறைந்தது. தேவர்கள் பிரம்ம தேவனிடம் முறையிட்டதில், அனைவரும் சேர்ந்து ஆலோசித்ததில், விசுவகர்மாவின் சாணைப் பிடிக்கும் இயந்திரத்தில் இந்த சூரியனைக் கடைந்தால் முன்போல் காந்தி உண்டாகும் என்று, சூரியனிடம் சொன்னதில், சூரியனும் அதற்குச் சம்மதிக்கவே அனைவரும் விஸ்வகர்மாவிடம் சென்று, அவருடைய இயந்திரத்தில் சூரியனைக் கடையவே முன்னை விடப் பிரகாசமான காந்தியுடன் திகழ்ந்தார். சூரியனைக் கடைந்து ஒளி ஏற்படுத்திய நாளான அன்று 'ரதஸப்தமிதிதி' என்று கொண்டாடப்படுகிறது. மிகப் புண்ணியமான நாளாகும்.

'ரதஸப்தமிதிதி' அன்று, ஒரு சக்கரம் உடைய, ஏழு குதிரைகள் பூட்டிய, ஒரு ரதத்தையும் மகாவிஷ்ணு வானவர் சூரியனுக்குக் கொடுத்தார். பச்சைக் குதிரை ரூபமெடுத்த ஏழு சந்தஸ்ஸுகளும் அவருடைய தேரிலே பூட்டப்பட்டிருக்கின்றன.

காஸ்யப முனிவரின் பத்தினியான விநதையிடம் உண்டான கால்களில்லாத அருணனெனும் பிள்ளை, சூரியனுடைய ரதத்திற்கு 'ரத' சாரதியாக ஏற்படுத்தப் பட்டான்.

சூரியனுடைய ரதம் பொன்மயமானது. ஒன்பதா யிரம் யோஜனை விஸ்தீரணம் உடையது. அந்த ரதத்துக்கு ஐந்து ஆரங்களும், மூன்று நாபிகளும் உண்டு; மூன்று நாபிகளும் மூன்று காலத்தையும் குறிக்கும். அந்த ரதத்துக்கு ஒரே சக்கரம் மட்டுமே உண்டு; அந்தச் சக்கரம் ஸம்வத்சரமயமானது. சக்கரத்தில் உள்ள ஆறு கட்டை களும், ஆறு ருதுக்களையும் குறிக்கின்றன. சக்கரத்தின் மேல் பாகமும், கீழ் பாகமும் உத்தராயணத்தையும், தக்ஷிணாயத்தையும் குறிக்கின்றன. அந்த ரதத்தை காயத்ரி, திருஷ்டுபு, அனுஷ்டுபு, பிரகதி, பங்க்தி, ஜகதி, உஷ்ணிகு என்ற ஏழு சந்தஸ்ஸுகளும் குதிரைகளாகி ரதத்தை இழுத் துச் செல்கின்றன. பொன்மயமாக ஜொலிக்கும் அந்தத் தேரிலேறிதான் சூரியன் நாள்தோறும் வானிலே பவனி வருகிறார். ரத சாரதிக்கு இடுப்புக்குக் கீழே அவயவங்கள் கிடையாது.

சூரியன் நான்கு பட்டணங்களையும் சுற்றி சஞ்சாரம் செய்து உதயம், மத்தியானம் அஸ்தமனம், அர்த்தராத்திரி, என்ற காலங்களை உண்டாக்குகிறார்.

தைமாதம் சுக்லபக்ஷ ஸப்தமிக்கு 'ரதஸப்தமி' என்று பெயர். இன்றுதான் சூரியனுக்கு விசேஷமான காந்தி உண்டாயிற்று என்று புராணங்கள் மூலம் அறிய முடிகிறது.

ரதஸப்தமி பிதாமகர் 'பீஷ்மர்' இறந்த நாள். ஆதலால், தர்ப்பணம் செய்பவர்களும் உண்டு. அவ ருடைய சந்ததிகளான நாம் அவருக்குத் தர்ப்பணம் கொடுப்பதால், நமக்குப் புண்ணியங்கள் சேர்வதாக ஆகும், இதற்குப் 'புண்ணிய கால தர்ப்பணம்' என்று பெயர்.

அன்றைய தினம் எருக்கன் இலைகள் ஏழும், இலந்தை இலைகள் ஏழும் ஒன்று சேர்த்து, மஞ்சள் கலந்த அட்க்ஷதையுடன் பெண்கள் ஆண்கள் குழந்தைகள் உட்பட அனைவரும் தலைக்கு மேல் வைத்துக் கொண்டு நீராட வேண்டும். இலைகளைப் பின்பக்கமாகத் தள்ளி விட்டு விட வேண்டும்.

தந்தை இல்லாத ஆண்கள், கணவனை இழந்த பெண்கள் இவர்கள் ஏழு எருக்கன் இலைகள், ஏழு இலந்தை இலைகளுடன் வெண்மையான பச்சரிசியுடன், கருப்பு எள் கலந்து தலையில் வைத்து நீராட வேண்டும்.

ரதஸப்தமி அன்று சுவாமியிடம் சுத்தமான இடத் தில், செம்மண்ணினால் தேவையான அளவு பூசி, அந்த இடத்தில் 'ரதம்' வரைய வேண்டும். அதில் சூரிய சந்திரரை வரைந்து, பவனி வருவதாக இருத்தல் வேண்டும். அதற்கு சந்தனம், மஞ்சள், குங்குமம் இட்டு, சிகப்பு நிறம் உட்பட பலவாசனை உள்ள மலர்களால் அலங்கரித்து, சூரிய நாராயண பூஜையைச் செய்ய வேண் டும். அன்று சர்க்கரைப் பொங்கல், உளுந்து வடை ஓட்டையுடன் (துளையுடன்) செய்து இரண்டையும் நிவேதனம் செய்ய வேண்டும். கணபதி பூஜை முதல் ஆவாஹனம், சோடசோபசார பூஜையுடன் கொண்டாட வேண்டும். வாசலில் சூரிய ஒளிபடும் இடத்தில் ரதம் வரைந்து, அரிசி, பருப்பு, வெல்லம் வைப்பதும் உண்டு. சூரிய சந்திரர் வரைந்து, சந்தனம் குங்குமம் வைத்து, பூக்களால் பூஜிக்கலாம். அன்று சூரியனுக்கு விசேஷ காந்தி ஏற்படுவதுடன், உத்தராயணப் பக்கம் ரதம் திரும்புவதாகவும் கூறுவர்.

சூரியனுக்குச் சர்க்கரைப் பொங்கல் செய்து நிவேதிப்பது என்பது... 'தக்ஷனின் யாகத்தில் தாக்ஷா யிணி, யோகாக்னியில் தன் உடலைத் துறந்ததை அறிந்த ஈசன், வீரபத்திரரை தோற்றுவித்து, தக்ஷனுடைய தலை யைத் துண்டித்து, தன்னை அவமதிக்கும் பொருட்டு செய்த யாகத்தில் கலந்து கொண்ட மற்ற தேவர்களையும் தகுந்தபடி தண்டிக்கச் சொல்லி அனுப்பினார்.

அதன்படி வீரபத்திரரும் தக்ஷனின் தலையைக் கொய்து, அங்கிருந்த தேவர்களைத் தண்டித்தார். 'ஈசனை, தக்ஷன் நிந்தித்தபோது இந்த வாய்தானே சிரித்தது' என்று கேட்டபடி சூரியனை ஓங்கிக் கன்னத்தில் அறைந்ததில் சூரியனுடைய பற்கள் அனைத்தும் பொல பொலவென்று கொட்டின.

பிரம்மனின் வேண்டுகோளின்படி, தக்ஷனுக்கு ஆட்டுக்கடாவின் தலையைக் கொய்து கொண்டு வரச் செய்து பொறுத்தியதில், அவன் உயிர் பெற்று எழுந்து தன் தவறுக்கு மன்னிப்புக் கோரினான். தேவர்களின் வேண்டு கோளின்படி அனைவரையும் ஈசன் மன்னித்தருளினார். ஆனால் ஈசனுடைய கோபம், சூரியன் விஷயத்தில் மட் டும் நீங்காமல் போனது. இழந்த பற்களை அவனுக்குத் திரும்ப அடையும் அருளைத் தரவேயில்லை.

இதன் காரணமாகவே சூரியனுக்குச் சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்யப்படுகிறது.

உளுந்து வடையை நடுவில் ஓட்டையுடன் செய்ய வேண்டும். அதற்கு, சூரிய ரதத்திற்குச் சக்கரம் போன்று என்று சொல்லுவதுண்டு. இது ஐதீகத்தில் சொல்வதுதான்.

சந்திரபாகா என்ற நதியின் கரையிலே 'சாம்பபுரம்' என்ற நகரம் இருக்கிறது. சூரியன் அங்கே பன்னிரண்டு ரூபங்களோடு வசிக்கிறார். விதிப்படி செய்யப்படும் பூஜையை அவர் பிரத்யக்ஷமாக நேரிடையாகவே ஏற்றுக் கொள்கிறார். சாம்பனுடைய விருப்பப்படியும், உலகத்தி

லுள்ளவர்களை அனுக்கிரகிக்கவும் சூரியன் பன்னிரண்டு ரூபங்களுடன் வசிப்பதாகப் புராணம் கூறுகிறது.

அதிதியின் பன்னிரண்டாவது புத்திரர் விஷ்ணு என்னும் சூரியன். அவரே வசுதேவருக்குப் புத்திரராக வாசுதேவராக அவதரித்தார். அவருடைய புத்திரனே சாம்பன். வாசுதேவரான கிருஷ்ணனின் குமாரன் சாம்பனை குஷ்டரோகியாக ஆகும்படி சபித்தார்.

ஜாம்பவதியின் மகன் சாம்பன். அவன் மிக அழகு வாய்ந்தவன். கிருஷ்ணனின் பத்தினிகள் பதினாயிரம் பேர், சாம்பனுடன் நீராடுவதைக் கண்ட கண்ணன், தன் மனைவிகளுக்கும் சாபம் கொடுத்தார். புத்திரனுடைய அழகில் மயங்கியதால் புத்திரலோகத்திலும் இடம் இல்லை; சொர்க்கத்திலும் இடமில்லை; தன் காலம் முடிந்த பின் திருடர்களால் கவரப்படுவீர்கள் எனவும், சாம்பனுக்கு அவன் அழகால் பெண்கள் மயங்கியதால், குஷ்டரோகம் பீடிக்கும்படியும் சாபமளித்தார். இச்சமயம் அங்கு ருக்மணி, சத்யபாமா, ஜாம்பவதி மூவரும் இல்லாததால் இச்சாபம் அவர்களைப் பற்றவில்லை. கண்ணனிடம் சாம்பன் தன் தவறு இல்லை என்று கூறியதில், அவரும் நாரதரிடம் சென்று பரிகாரம் செய்யும் படி சொன்னதில், நாரதரும் சாம்பனுக்கு சூரியனைப் பற்றிய விவரங்களைச் சொல்லி சூரிய பூஜையையும், சூரிய வழிபாடுகளையும் கூறினார். அதன்படி சாம்பன் வழிபட, அவன் நோய் அகன்றதுடன், சூரியனே தன் உருவச் சிலையை பிரதிஷ்டை செய்து வழிபடும் முறை களையும் கூறினார் என்று புராணம் விரிவாகக் கூறு கிறது.

மோட்சத்தை விரும்புகிறவர்கள் சூரியனை தங்கள் மனத்தில் இருத்தி தியானம் செய்ய மோட்சம் அடை கிறார்கள். குருபிகளும், தீராத நோய் உள்ளவர் களும் சூரியனை வழிபட நோய் நீங்கி முன்னைவிட அழகுள்ளவர்களாகிறார்கள்.

அக்னிஹோத்திரமோ, வேதபாராயணங்களோ, ஏராளமான தட்க்ஷணைகள் கொடுத்து செய்யப்படும். கர்மாக்களோ சூரியனை வழிபடுவதால் கிடைக்கும் பலன்களை விட அவைகள் அதிக பலன்களைத் தருவ தில்லை என்று புராணம் கூறுகிறது. மேலும் மனதில் தீய எண்ணங்களுடன் சூரியனை வழிபட்டால், அவர் சுட்டெரித்து விடுவார் என்பதாகும்.

புனிதமானவற்றுக்கெல்லாம் புனிதமாக அவர் திகழ்கிறார். மனித இனத்திற்கு எல்லாம் மங்களமாக அவர் திகழ்கிறார். அப்படிப்பட்ட திவாகரராகிய சூரியனை சரண் அடைகிறேன்.

தீர்த்தானாம் பரமம் தீர்த்தம்
மங்களானாம் ச மங்களம்!
பவித்ரானாம் பவித்ரம் ச
ப்ரபத்யேஹம் வாகரம்!!

இந்தத் தோத்திரத்தைச் சொல்லி சூரியனை வழிபட்டு நமஸ்காரம் செய்கிறவன் சகலபாபங்களிலிருந்தும் நீங்கப் பெற்றவனாகி முடிவில் சூரிய லோகத்தையும் அடைகிறான் என்று புராணம் கூறுகிறது.

(பி.கு.: 'பீஷ்ம தர்ப்பணம்' விடுபவர்கள், கறுப்பு எள்ளுடன் வெண்மையான அரிசியையும் சமமாக கலந்து விட வேண்டும். புண்ணியகால தர்ப்பணம் என்பது இப்படியாக விட வேண்டும் என்பர்).

ஸ்ரீராமர், 'ஆதித்யஹ்ருதயம்' என்ற ஸ்தோத்திரத்தால் சூரியனை வழிபட்டு, இராவணனைக் கொன்றதாக இராமாயணம் கூறுகிறது.

(பி.கு.) ரதம் ஏழு குதிரைகளுடன் வரையலாம்.

ராஜா செய்த அளவு 'ரதஸப்தமி விரதம்' செய்வது என்பது நம்மால் அவ்வளவு தூரம் செய்ய இயலாது என்பதால், 'ரத ஸப்தமி விரதம்' அன்று சூரியனைக் குறித்து பூஜித்து வழிபட, பல நன்மைகள் உண்டாகும் என்பதாகும்.

சூரியனிடம் பக்தி கொண்டு வழிபட்டால் சகல தேவர்களிடமும் பக்தியுடன் வழிபட்டதாகும். அவரே பிரமன், விஷ்ணு, ருத்திரன், வேதம், யக்ஞம், சொர்க்கம் அனைத்துமாக இருக்கிறார். அசையும் பொருள் அசையா பொருள் எல்லாவற்றிலும் அவரே உள்ளும் புறமும் வியாபித்திருக்கிறார். அவரே ஜீவராசிகளுக்கு உணவு வடிவமாகவும், நீராகவும் இருந்து காத்து வருகிறார். அவரே காலமாகவும், ஆகாயமாகவும், வாயுவாகவும், அக்னியாகவும் விளங்குகிறார்.

சூரியனுடைய பல நாமங்களில் ஒன்றின் பொருளையாவது நன்கு உணர்ந்து, ஜபித்து பக்தியுடன் அவரை வழிபட்டால் சகல ரோகங்கள் நீங்குவதுடன், நம்மைப் பற்றிய பாவங்களும் அகன்றுவிடும். பாவிகளுக்கு சூரியனிடம் பக்தி உண்டாகாது.

சூரியனுக்கு 'ரதோஸ்சவம்' செய்வது குறித்து புராணம் மிக விரிவாகக் கூறுகிறது. விமரிசனையாகவும், செய்ய வேண்டிய கிரமங்களுடனும், சிறு தவறு நேர்ந்தாலும், அதன் பாதிப்புகளையும் அறியலாம். அதனால் ரதஸப்தமி அன்று சூரிய நாராயணனுக்குச் சர்க்கரைப் பொங்கல், வடையுடன் பூஜித்து வழிபட, தேவர்கள், பித்ருக்கள், மனிதர்கள் உட்பட ஜீவராசிகளின் உயிர்நாடியாக அனைவரையும் காத்தருளும் அவரை வணங்கினால் அவரின் அனுக்கிரகத்தால் தீராத நோய்கள் நீங்குவதுடன், பாபங்கள் விலகி நற்கதி அடையலாம் என்று இதன் மூலம் அறிந்து கொண்டு சூரியனை வழிபட அவர் அருள்பெற வேண்டுவோமாக...!

★★★

# செண்டைக் கண்டு கொண்டேன்

- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

ஒரு சமயம், ''கனகந்திரள் கின்ற பெருங்கிரி
தனில் வந்து தகன் தகனென்றிடு
கதிர்மிஞ்சிய செண்டை எறிந்திடு
கதியோனே''

எனும் திருப்பரங்குன்றத் திருப்புகழ் பாடலில் வருகின்ற பாடலில் செண்டை எனும் பதத்துக்குப் பொருள் விளங்காது எமது குருநாதராகிய வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகளிடம் விளக்கம் கேட்க மனது உந்திய போதிலும் உள்ளூற அச்சம் தோன்றியதால், அறிஞர்கள் பலரைக் கேட்டு தெரிந்து கொள்ளலாம் என நினைத்தேன்.

மேலே கூறிய அடியின் கருத்து :-

''பொன் மலிந்த பெருங்கிரியான மேரு மலைக்கு வந்து தகன் தகனென்று ஒளி வீசும் செண்டை எறிந்த - திறமை மிக்கவனே'' என்பதாகும்.

திருவிளையாடல் புராணத்தில் இதன் வரலாற்றினைப்பற்றி ஒரு பகுதியே உள்ளது. இதனையே அருணகிரிநாதர் தாம் பாடிய பாடலில், முதல் அடியிலேயே எவ்வளவு துல்லியமாக சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பாணியில் விளக்கியுள்ளது இவரது கவித்திறனுக்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு தேவையில்லை.

பொதுவாக யாவரும் செண்டு என்றால், பூச்செண்டு அல்லது பூப்பந்து என்றுதான் பொருள் கொள்வர். ஐயனார் திருக்கரத்தில் செண்டு இருக்கிறதென்றும், கரிகாற்சோழன் இமயமலையைச் செண்டால் அடித்து திரிந்தான் என்றும் சில செய்திகள் பண்டைய நூல்கள் மூலம் அறியப்படுகிறது. இச்செண்டு என்பது என்ன? பந்தா? அல்லது மலர்ச் செண்டு போன்ற ஆயுதமா? எல்லாம் சந்தேகமாகவே தோன்றின எனக்கு.

பல மாதங்களாகவே என் மனம் இதைப்பற்றி உறுத்திக் கொண்டிருந்தது. அருணகிரிநாதரும் பொருந்தாத ஒன்றைக் குறித்து பாடியிருக்கமாட்டார் என உறுதியாயிருந்தேன்.

செண்டு எனும் பதம் வேறு எந்த நூல்களிலாவது வருகிறதா என ஒரு மூதறிஞரை கேட்டபோது ''இந்த வார்த்தை வில்லிபாரதத்தில் வருகிறது''. படித்து அறியவும் எனக் கூறி, வில்லிபாரதத்தில் சபா பருவத்தில் சூதுபோர் சருக்கத்தில் வந்துள்ளது எனக் கூறியதும், அதில் ஒரு பாடலில் இப்பதத்தை உபயோகித்து உள்ளதைக் கண்டேன். காந்தாரியோடு இருந்த திரௌபதியை துச்சாதனன் இழுத்துச் சென்றதைப் பற்றி கூறப்பட்ட பாடலாகும்.

துச்சாதனன் திரௌபதி முன் சென்று தன் கையிலுள்ள செண்டால் அவள் கூந்தலைப்பற்றிச் செல்லலானான். அது குறித்த பாடல் :

''தண்டார் விடலை தாயுரைப்பத்
தாய் முன்னணுகித் தாமரைக் கைச்-
செண்டால் அவள் பைங்குழல் பற்றித்
தீண்டானாகிச் செல்கின்றான்.
வண்டார் குழலுடன் குலைய, மானங்குலைய
மனங்குலையக்
கொண்டாரிருப்பரென்று நெறிக்கொண்டாள்
அந்தோகொடியாளே-'' என்பதாகும்.

திரௌபதி அந்நாளில் தீண்டாத நிலையில் இருந்தாளென்று பின்னே ஓரிடத்தில் கூறப்பட்டுள்ளதையும் அறிந்தேன். ''தீண்டாத கற்புடைய செழுந்திருவை'' என நூலாசிரியரே குறிப்பிடுகின்றார். அதனால் துச்சாதனன் அவளைத் தன் கையினால் பற்றாமல் செண்டால் பற்றிச் சென்றான் என ஆசிரியர் கூறுகின்றார். இதைப் பற்றிய விவரங்களைப் பல தமிழ் அறிஞர்களிடம் கேட்டேன். ''கைச்செண்டால் அவள் பைங்குழல் பற்றி'' என வரும் தொடரால் குறிக்கப்பட்ட செண்டு என்பதற்குப் பூச்செண்டு எனப் பொருள் கூறிச் சமாதானப் படுத்தினர்.

அது சமயம் துச்சாதனன் கையில் பூச்செண்டு ஏது? திரௌபதி கூந்தலில் அணிந்திருந்த புஷ்ப ஆரத்தை பிடித்து இழுத்தான் எனப் பொருள் கொள்ளலாமா? ஆனால் பாடலிலோ தெளிவாக கைச்செண்டால் எனப் பாடப்பட்டுள்ளதே! மேலும் அது சமயம் திரௌபதி தீண்டாத நிலையில் இருந்த அவள் கூந்தலில் மாலை அணிவதும் கையில் செண்டு வைத்திருப்பதும் இயல்பல்லவே!

செண்டு என்பதற்குப் பந்து என்று பொருள் கொண்டு அதை சம்மந்தப்படுத்திப் பார்க்கலாமென்றால் பந்துக்கு இங்கே என்ன சம்பந்தம் என ஐயங்கள் தோன்றின. சரியான விளக்கம் அறியாது, என் தந்தை யாரிடம் கேட்க, அது சமயம் என் தந்தையார் எதேச்சையாக அடியேனையும் துணையாக அழைத்துக் கொண்டு கும்பகோணம் செல்ல நேரிட்டதால், கும்பகோணத்

## இருபத்தொன்றாம் நூற்றாண்டில் இந்தியா

**- திருமதி பட்டம்மாள் ஆனந்தா**

இருபத்தொன்றாம் நூற்றாண்டில்
இப்படித்தான் இருக்கும் என் தாய்த்திரு நாடு.

அறிவை அறிவால் அறிந்து ஆன்மாவை அறிவோம்
பற்று விடற்குப் பற்றற்றான் பற்றினைப் பற்றுவோம்.
ஆதவனைப் பணிந்திடுவோம் சாதனை படைத்திடுவோம்
மாதவனைப் பணிந்திடுவோம் வேதனை நீக்கிடுவோம்.

அநாதைக்கு ஆதரவு நல்க விடுதிகளை அமைப்போம்
அநாதையாக்கி முதியோரை விடுதிகளில் தள்ளோம்
கண்ணிய உணர்வோடு பெண்மையைப் போற்றுவோம்
திண்ணிய உணர்வோடு வன்மையைத் தூற்றுவோம்.

நள்ளிரவில் ஓர் இளநங்கை நகைகளோடு தனியாக
நடுக்கமின்றி நடுத்தெருவில் நடந்து செல்வாள்.

மகாத்மா கூறிய சுதந்திரத்தை நாமும் காண்போம்
மகான்களின் சீரிய வழியில் நாமும் செல்வோம்.

பண்டைய பாரதப் பண்பினைப் போற்றிடுவோம்
அண்டைய நாடுகளுடன் நேசக்கரம் நீட்டிடுவோம்
சத்துவ குணம் மிகுந்து சத்தியத்தைக் கடைப்பிடிப்போம்
ராட்சத குணம் அழிந்து இலட்சியத்தை நாம் அடைவோம்.

நிகழ்காலத்தில் எதிர்காலத்தை எண்ணும் நமக்கு
புகழ்மிக்க வருங்காலம் திண்ணமாக உண்டு.
எண்ணங்களுக்கு வலிமையுண்டு இறுமாப்புடன்
இருப்போம்
வண்ணமயமாயிருக்கும் இருபத்தொன்றாம் நூற்றாண்டு.

திற்கு 6 மைல் தொலையில் உள்ள ஆறுபாதி எனும் ஊரை அடைந்ததும், பொழுது இருட்டி விட்டதால் அவ்வூர் அக்ரகாரத்திற்குப் பின்புறமுள்ள குளக்கரை அருகே ஒரு பெருமாள் ஆலயம் இருக்கக் கண்டு, ஆலயத்துள் பிரவேசித்து மூலவரான ராஜகோபால சுவாமியை தரிசிக்க சென்றோம்.

பட்டாச்சாரியார் அர்ச்சனை முதலியவைகளை செய்து பிரம்பைப்போல் ஒன்று பெருமாள் கரத்தில் சாத்தியிருப்பதை கற்பூர ஆரத்தியின்போது காட்டி னார். என் தந்தையார் இது என்ன புதுமையாக இருக் கிறதென்று கேட்க, பிரம்பைப் போல தலைப்பில் இரண்டு வளைவுகள் இருப்பதை மறுமுறை மாலைகளை விலக்கி தெளிவாக எங்களுக்குக் காட்டினார். இதுதான் செண்டு எனும் ஆயுதம் என்றும் சொன்னார்.

அது சமயம் என் மனக்கண்முன் துச்சாதனன் தலைப்பு வளைத்த பிரம்பு போன்ற கருவியால்தான் திரௌபதி கூந்தலை இழுத் திருப்பான் எனும் காட்சி என் மனக்கண் முன்னே மின்னலைபோல் தோன்றி மறைந்ததும், அடுத்தடுத்து கரிகாலன் செண்டாயுதத்தோடு நின்றதையும், ஐயனாரும் என் மனக் கண் முன்னே தோன்றலாயினர். மதுரையில், உக்கிரவழுதி பாண்டியன் பஞ்சம் நேரிட்டபோது மேரு மலையைச் செண்டு என்னும் கருவியால் எறிந்ததைத் தான், அருணகிரியார் தம் பாடலில் ''கதிர் மிஞ்சிய செண்டை எறிந்திடு கதியோனே'' எனப் பாடியுள்ளதன் உட்கருத்தை அறிந்து பரவசமடைந்தேன்.

எதைப்பற்றி இதுகாறும் என் எண்ணம் ஆராய்ந்து கொண்டு இருந்தோ அந்த சந்தேக இருளை அகற்றி, முருகப் பெருமானின் மாமனாராகிய நாராயணனே துச்சாதனன், கரிகாலன், ஐயனார், உக்கிரவழுதி பாண்டியன் முதலானோர்கள் கையில் கொண்டுள்ள செண்டெனும் கருவி இன்னதுதான் என்று அறியும்படி இத்திருவிளையாட்டினை நிகழ்த்தினான் போலும் எனக் கருதி, பட்டாச்சாரியாரை நோக்கித் தாங்கள் எங்களுக்கு பெரிய உபகாரம் செய்திர்கள். பெருமாளை தரிசித்ததால் எனக்கு பெரிய லாபம் கிடைத் தது. இதுகாறும் இந்தச் செண்டை நாங்கள் பார்த்ததில்லை எனக் கூறி விடைபெறும் சமயத்தில், பட்டாச்சாரியார், இவ்வுருவத்தை வடித்த ஸ்தபதியே தான் மன்னார்குடி யில் உள்ள பெருமாளையும் வடித்து கையில் செண்டு ஆயுதத்தையும் பொருத்தியுள்ளதை கூறக்கேட்டோம். அம்மூர்த்திக்கு செண்டலங்கார பெருமான் எனும் திருநாமம் வழங்குவதாகவும், இதனைக் குறித்து இலக்கிய வாயிலாக உறுதி செய்யும் வகையில் ''செண்டலங்கார பெருமாள் வண்ணம்'' என்ற பிரபந்தம் ஒன்றும் உள்ளதாகவும் அறியக் கேட்டோம்.

அது சமயம் அடியேனுக்கும், சுந்தரர் திருக்கரத்தில் உள்ள செண்டும் ஒரு ஆயுதம் என்பதைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய் அவ்வப்போது அருள் புரியும் முருகப் பெருமானை, முருகன், குமரன், குகன் என்று மொழிந்து உருகும் செயல் தந்து அருள என்றென்றும் முருகப்பெருமானைக் கண்மலராலும், மனமலராலும், கைமலராலும் போற்றித் துதித்திடுவேன் ஆக! முருகன் திருவருளே திருவருள்!

# கம்பரின் இராமாவதாரம்

## அயோத்யா காண்டம்

### 4. உயிர்கள் அனைத்தும் உத்தமனுடன் சென்றன.

சிற்றன்னையிடம் விடை பெற்ற இராமபிரான் பெற்ற அன்னையின் அரண்மனையை நோக்கி வருகிறார். கவரி, குடை முதல் மற்ற அரச சின்னங்கள் இல்லாது தனிமையாக - தனிமையில், விதி முன்னால் செல்ல, தரும தேவதை ஏங்க - வரும் மகன் தன் காலில் விழுந்து வணங்க'' ஏன் முடிசூடவில்லை?'' எனக் கேட்கிறாள். ''அம்மையே! உன்மகன் - என் தம்பி அரசனாகப் போகிறான்.'' என்றார். கௌசலை ''மூத்தவனிருக்க இளையவன் அரசை ஏற்பது முறையற்றது என்றபோதிலும், பரதன் உன்னைக்காட்டிலும் மேன்மையானவன். தந்தை சொல் மீறாது, உன் தம்பிக்கு அரசையளித்துக் கூடவே பிரியாதிருந்து நீடுழி காலம் வாழ்வாயாக'' என்றாள். ''அன்னையே! என்தந்தை வேறொரு கட்டளையிட்டுள்ளார். பதினான்கு வருடங்கள் காட்டில் தவமுனிவருடன் வசித்துவா'' என்றார். இது கேட்டு கௌசலை தாங்க முடியாத துயரமுற்றாள். அப்போது கூட ''அன்புருவான தசரதருக்கு நீ என்ன குற்றம் செய்தாய்? அவர் நெறி தவறாதவராயிற்றே'' எனக்கூறி அலறினாள். மீண்டும் சிறிது ஆறுதலடைந்து ''இராம! அரசரின் கட்டளையை மீற முடியாது. நீ காடு செல்லும் பட்சத்தில் உன்னைப் பிரிந்து உயிர் வாழ முடியாத என்னையும் ''காட்டிற்குக் கூட்டிச் சென்றுவிடு'' என்ற காலத்தில் இராமபிரான் ''என்னை நீங்கி மனம் வருந்தப்போகும் தந்தையாருக்கு, மனைவி என்ற முறையிலே அவரைப் பிரியாமல், ஆறுதல் சொல்லித் தேற்ற வேண்டிய கடமையை விட்டு என்னுடன் வருகின்றேன் என்கின்றாயே, தாயே! உன் தருமத்தை மறந்து விட்டாயா?'' எனக் கூறினார். இது, கேட்ட கௌசலை ''பரதன் நாட்டையாளட்டும், தசரதரை வணங்கி இராமன் காடுசெல்லாதவண்ணம் செய்வேன்'' எனத் தனக்குள் கூறிக்கொண்டு கைகேயியின் அரண்மனை நோக்கிச் சென்றாள்.

கைகேயியின் அரண்மனையில் தசரதர் நினைவில்லாமல் கிடக்கும் காட்சி கண்டு பதறினார் கௌசலை. ''மகனே! இராமா! உன் தந்தை என்னவோ மாதிரி கிடக்கிறாரே! இராகவா!'' என்றெல்லாம் அலறும் அவள் எதிரில் வசிட்டர் தோன்றினார். அவரும் திடுக்கிட்டார். ''தசரதன் இறந்து போகவில்லை. ஆனால் கட்டாயம் இறந்துவிடுவான் எனத் தோன்றுகின்றது. தசரதர் மூர்ச்சையாகி உள்ளார். கௌசலை துயரமே உருவாகவுள்ளாள். கைகேயி துன்பமற்று உள்ளாள்''. என எண்ணிய வசிட்டர் ''அம்மா! மகராஜா ஏன் இப்படி இருக்கிறார்?'' என்ன, அவள் கொஞ்சமும் அஞ்சாது தன்னால் நிகழ்ந்த தன்மை தானே தெரியச் சொன்னாள். வசிட்டர் தன் அருமைச் சீடனான தசரதன் முகத்தில் தண்ணீர் தெளித்து, விசிறி கொண்டு விசிறி, எழுப்பி ஆறுதல் கூறியதுடன், கைகேயிக்கு நற்புத்தி கூறினார். குருவான வசிட்டரை மீறி ''நான் கேட்டது கிடைக்கா விட்டால் உயிரை விட்டுவிடுவேன்'' என்றாள். ''கணவன் மறைந்து விடுவான். உலகம் தாங்காது. பாவம் நேரும் என உணர மறுக்கிறாய். என்ன சொல்வது? நீ ஒரு பெண்ணா? பேயா? தீயா? உலகில் உனக்கு என்ன கிடைக்கப் போகிறது? அரசன் மகனைக் காட்டிற்குப் போவென முன்னர் நீ சொல்லிவிட்டாய். அந்த ராமனும் போகாதிருக்க மாட்டான். உன் போல் தீயவர் உலகத்தில் இருக்க மாட்டார்.'' என்று சீறிப் பேசினார் வசிட்டர்.

தசரதனோ ''உன் வாய் வார்த்தையால் என் உயிரை உறிஞ்சிவிட்டாய். உன்னை மனைவியாக அடையவில்லை. யமனாக அடைந்துவிட்டேன். உன் கழுத்திலுள்ள தாலிக்கயிற்றை உன் மகன் பட்டாபிஷேகத்திற்கு கையில் காப்பாகக் கட்டு'' என்று அலறி ''இராமா! உன் தலையில் அபிஷேகம் செய்வதற்கு வந்துள்ள புனித நீரை என் பிரேத சாந்தி செய்ய உபயோகிக்கப்போகிறாயா? மகுடம் தருகிறேன் எனக் கூறிய நான் சடாமகுடத்தையா அளித்துவிட்டேன்? உன் தந்தை வயதானவன். துக்கத்தைத் தாங்கமாட்டான் என அறிந்தும், வயது முதிர்ந்த என்னைக் கைவிட்டுவிட்டாயா? உனக்கு மகுடம் சூட்டி, நான் தவம் செய்யக்காடு செல்ல வேண்டிய நேரத்தில் நீ காடு செல்வதா? நான் அதற்கு முன் உலகை விட்டே போய்விடுவேன்! சீதையைத் திருமணம் செய்து கொண்டு அரண்மனைக்கு நீ வந்த அழகான காட்சியைக் கண்ட நான் அவளுடன் காடு செல்வதைக் காணச் சகியேன். இராம! இவ்வளவு பெரிய அரசை உனக்குத் துரோகம் செய்த கைகேயிக்கு அளித்த உன் வள்ளல் குணம் என் உயிரை மாய்த்துவிடும். நீ காடு செல்வாயாம்! நான் இந்தக் கைகேயியைப் பார்த்து கொண்டு நாட்டில் இருப்பேனாம்! உன்னைப் பிரிந்து நான் உயிரோடு இருந்தால் ஐயா! கைகேயியை நேராகேனோ! அரசகோலத்தில் உன்னைக் காண விரும்பிய நான் உன்னைச் சடாமகுடத்துடன் பார்ப்பதா?'' என அலறி

னான். பக்கத்திலிருந்த கௌசலை ''அரசே! வசிட்டர் வாக்குக்குப் பணிந்து இராமன் வந்தாலும் வரலாம்'' என்ற போது, ''கௌசல்யா! இராமன் காட்டுக்குப் போகாமலிருக்கமாட்டான். என் உயிரும் நில்லாது. நான் அப்படி ஒரு சாபத்தையடைந்தேன்'' எனத் தயரதர் ஒரு காலத்தில் நிகழ்ந்த வரலாறு கூறினார்.

''ஒரு சமயம் வேட்டையாடக் கானகம் சென்றேன். இரு கண்களுமில்லாத தாய் தந்தையரை உறி கட்டிச் சுமந்து வந்த ஒரு நல்ல மகன், அவர்களின் தண்ணீர்த் தாகம் தீர்க்க, நீர் நிலைக்கு வந்தான். யானை தண்ணீர் குடிக்கிறது என எண்ணி அந்தத் திசை நோக்கி ஒரு அம்பைச் செலுத்த, அந்த இளைஞன் அலறி வீழ்ந்தான். ஓடிச் சென்று பார்த்த காலத்தில் அவன்'' அரசே! வருந்தாதே! யானை என எண்ணி அம்பு விட்டாய். விதியின் விளையாட்டு இது! நீ என் தாய் தந்தையருக்குத் தண்ணீர் கொண்டுபோய்க் கொடு. அவர்கள் தாகம் தீர்ந்தபின் உம் மகன் இறந்தான் என்று கூறு.'' எனக்கூறி உயிர் துறந்தான். நீர்ப்பாத்திரத்தை எடுத்துக் கொண்டு அவர்கள் இருந்த இடம் சென்றேன். ''மகனே ஏன் இவ்வளவு தாமதம்?'' என அவர்கள் கேட்க, என்னையும் அறியாமல் ''நான் அயோத்தி அரசன்'' என நடந்ததைக் கூறினேன். ''ஐயன்மீர்! கவலையுறாதீர்கள்! இனி உங்கள் மகனாக நான் இருந்து சேவை செய்வேன்'' எனக் கூற, ''அரசனே! தவறு நேர்ந்து விட்டது. மன்னிக்க வேணும்.'' என்று கூறினாய். எனவே கொடிய சாபம் கொடுக்க மாட்டோம். எங்களைப் போல நீயும் உன் மகனின் பிரிவு தாங்காது உயிர் விடுவாய்'' எனச்சாபமிட்டு மறைந்தனர். எனவே என் மறைவு நிச்சயம்'' என அலறினார் தசரதர்.

இந்நிலையில் வசிட்டர் சபையை அடைந்து, கைகேயி வரம் பெற்று இராமபிரானைக் காடு செல்லும் படி ஏவிய செய்தியைக் கூற செய்தி செவியில் சாராத முன் தசரதன் போல் அனைவரும் மயங்கி விழுந்தனர். மக்கள் அழுதனர் என்று கூற வந்த கம்பன் பசு அழுதது. கன்று அழுதது. நன்றியென்பது தெரியாத பூனை அழுதது. தாய்மார் களின் வயிற்றிலிருந்த கருப் பிண்டங்கள் அழுதன என்கிறார். ''இராமன் அரசாள இப்பூமி புண்ணியம் செய்ய வில்லை.'' ''விதி விளை யாடுகிறது'', ''இராமன் முடி சூடும் காட்சி காண நம் கண்கள் காணப் பாக்கியம் செய்யவில்லை,'' ''பரதன் அரசை ஏற்கமாட்டான்'', ''இராமனும் நாட்டிற்கு வர மாட்டார்'' ''ஐயோ! இலக்குவா! நீ இந்த நிலையை எவ்வாறு தாங்குவாய்? என்றெல்லாம் மக்கள் பற்பல விதமாகப் பொங்கி வேதனையுடன் பேச, நடந்த செய்தி யறிந்த இலக்குவன் ஊழிக்காலத்தில் உலகை அழிக்கும் நெருப்புப் போல் தோன்றி'' சிங்கத்திற்கு என்றிருந்த உணவை நாய்க்குக் கொடுத்த மாதிரி இராமபிரானுக்கான அரசை பரதனுக்கு அளிப்பதா? ..... இந்தப் பெண்ணின் புத்தியே புத்தி! பூமியில் உள்ள அனைவரையும் அழிக்கப் போகிறேன். போருக்கு வருவோரை எல்லாம் அழித்து அவர்களது உடல்களை வானளாவ குவிக்கப்போகிறேன். என் தலைவனான இராமபிரானுக்கு முடிசூட்டப்போகிறேன். முடிந்தவர் தடுக்கலாம்! மும்மூர்த்திகள் வந்தாலும் சரி, ஒரு பெண்கூட இல்லாமல் உலகத்தில் உள்ள பெண்கள் யாவரையும் ஒழிக்கப் போகிறேன்'' எனச் சீறினான். புகைசூழ எரிந்து நிற்கும் தீப்போன்ற இலக்குவ னின் கோபத்தையடக்க, மேகமே இறங்கிவந்த மாதிரி இராமபிரான் தோன்ற, ''தம்பி! நம்தந்தையின் மீதோ, நம் அன்னை கைகேயியின் மீதோ குற்றமில்லை, பரதனும் நாட்டிற்கு ஆசை கொள்ள வில்லை. இது விதியின் பிழை.'' என ஆறுதல் கூற, விதிக்கு என் வில்பதில் சொல்லும்!'' என்றார் இலக்குவன். ''இலக்குவா! தாய் தந்தையரைக் கோபிக்கலாமா?'' என, இலக்குவன் ''நல் தாதை, தனி நாயகன் பெற்ற தாயும் நீ அன்றிப் பிறரில்லை'' எனச் சீறினான். ''இலக்குவ! தந்தை சொற்படி நடப்பது நம் கடமை'' எனக் கூற, இலக்குவனின் சினம் அடங்கியது.

இராமலட்சுமணர் சுமித்திரையின் அரண்மனை யடைந்தனர். சுமித்திரை தன் மகனான இலக்குவனிடம் ''உனக்கு இனி இராமன் இருப்பிடம் தான் அயோத்தி. இராமன் உன் தந்தை; சீதை உன் அன்னை: இவர்களுடன் செல். அடிமையாகப் போ, இராமபிரான் திரும்பி வந்தால் நீயும் வா. இல்லாவிடில் நீ முன்னால் மடிந்து போ. இராமனுக்கு ஆபத்து வரக் காணக்கூடாது'' என்றாள்.

இருவரும் சீதாபிராட்டியிருப்பிடம் செல்லும் போது, இராமபிரான் ''தம்பி! நம் தாய்மார்களும் தந்தையும் துயரத்தில் ஆழ்ந்துள்ளனர். அவர்களுக்கு ஆறுதல் கூறிக்கொண்டு நீ அயோத்தியில் இரு'' என்றார். வேதனையில் சிறிய இலக்குவன் ''தண்ணீர் இருந்தால் அதில் மீனும் வாழும். நீல மலரெனும் கருங்குவளையும் வாழும். இல்லாவிட்டால் மீன் மாண்டுவிடும். மலரும் வாடி விடும். அயோத்தி எனும் குளத்தில் இராமன் என்ற தண்ணீர் இருந்தால் தான் நான் வாழ்வேன்'' எனக் கூற, இராமரும் இசைந்தார்: பின் இருவரும் சீதாபிராட்டியின் இருப்பிடம் சென்றனர்.

வழியில் அவர்களைக் கண்ட வசிட்டர் ''நீ காடு சென்றால் தயரதர் மறைந்து விடுவார்'' எனக் கூற ''என் கடமை என் தந்தை சொற்படி நடத்தல். அவர் துயரப் படாது காப்பாற்றுவது தங்கள் கடமை'' என்றார் இராம பிரான்.

''அரசனாகப் போகும் பெருமானை அடவி செல்வனாகக் காண்கிறோம்!, நம் உயிர் போகமாட்டேன் என்கிறதே'', ''இந்த நாட்டில் கண்ணொடு பிறந்ததே பாவம்,'' ''இந்த நாட்டில் லட்சுமணன் ஒருவர் தான் இராமனுக்கு உறவா? அவர் மாத்திரம் கூடப் போகின் றாரே'' என்றெல்லாம் மக்கள் பேசினர்.



இவர்கள் வரும் கோலங் கண்ட சீதாபிராட்டி ''என்ன ஏதோமாதிரி வருகிறீர்கள்'' எனக் கேட்க, இராம பிரான்'' என் தம்பி அரசை ஏற்கப் போகிறான், நான் நம் தாய் தந்தையர் சொற்படி காடு செல்லப் போகிறேன். நீ வருத்தமுறாது இங்கேயே இரு'' என்றார்.

இராமபிரான் அரசை இழந்து விட்டான். காடு செல்லப்போகிறான் என்றெல்லாம் பிராட்டி கவலைப் படவில்லை. நீ வருந்தாதே. நான் போகிறேன் என்ற வார்த்தைகள் அம்மையின் செவிகளைச் சுட்டுவிட்டன. தருமத்தைக் காக்க வேண்டுமென்பதற்காக இறைவன் இராமனாகப் பிறந்தவுடன் அவருடைய பிரிவு தாங்க முடியாமல் மிதிலையில் தானும் பிறந்து அவரைப் பிரியாத பிராட்டியிடம், உன்னைப் பிரிந்து போவேன் என்றால் நடக்குமா? என்கிறார்கவிஞர்.

''தேவி! காட்டில் உள்ள கற்கள் உன் காலில் குத்தும். சூரிய வெப்பம் உன்னைச் சுடும்'' என்று கூற, அம்மை ''உன் பிரிவினும் சுடுமோ பெருங்காடு?'' என்றார். மேலும் இராமபிரான் ''தேவி! நீ கூட வந்தால் பல துன்பங்கள் உண்டாகும்.!'' என்றார். பிராட்டி ''என்னைப் பிரிந்தால் தங்களுக்கு இன்பமா? (எற்றுறந்த பின் இன்பங் கொலோ) என்று கூறி, அரண்மனைக்குள் சென்று தன் ஆடை ஆபரணங்களை மாற்றித், தானும் மரவுரி உடுத்துக் கொண்டு, இராமபிரானுடன் புறப்படத் தயாராகி விட் டாள். அது கண்டு அனைவரும் உயிர் நீங்கிய மாதிரித் தரையில் வீழ்ந்தனர். அவர்கள் சாகவில்லை. வாழ வேண்டும் என்ற விதியிருக்கும்போது உயிர் போகுமோ? என்கிறார் கவிஞர். வாழுநாள் உள தென்ற பின் மாய்வரோ?

இலக்குவன் முன் செல்ல, சீதாபிராட்டி பின் செல்ல, இராமபிரான் அவளுக்குப் பின் செல்லக் கண்ட, அந்த நாட்டு மக்களின் துயரத்தை எவ்வாறு கூறுவது?

சீரைச் சுற்றித் திருமகள் பின் செல
மூரி விற்கை இளையவன் முன் செலக்
காரை ஒத்தவன் போம்படி கண்ட அவ்
ஊரை உற்றது உணர்த்தவும் ஒண்ணுமோ!

''ஏ, வனதேவதைகளே! சீதாராம லட்சுமணர்களைப் பத்திரமாக எங்களுக்குத் திருப்பி அனுப்பி விடுங்கள்'' என நடுங்கி அழுது அலறினர்.

சுமந்திரனால் செலுத்தப்பட்ட தேரில் இராம லட்சுமணர் சீதை மூவரும் சென்றனர்.

இராமபிரானைப் பிரிந்து வாழமுடியாத பலர் கூடவே புறப்பட்டனர். தசரத சக்ரவர்த்தி மூர்ச்சையாயிருந்தார், இராமபிரானுடன் போகவில்லை. கௌசலை, சுமத்திரை கைகேயி மூவரும் போகவில்லை. ஜனங்கள் யாவருமே ராமனுடன் கூடக் காட்டுக்குச் சென்றனர். அவர்களில் எழுதப்பட்டிருந்த சித்திரங்கள் உயிரில்லாததால் போகவில்லை; எல்லோரும் சென்றனர் என்கிறார் கம்பர்.

ஏவிய குரிசில் பின் யாவர் ஏகிலார்?
மா இயல் தானை அம்மன்னை நீங்கலா
தேவிய ரொழிந்தனர்: தெய்வமாநகர்
ஓவியம் ஒழிந்தில: உயிரிலாமையால்.

(தொடரும்)

# ஸ்ரீ சாரதா புஜங்கம்

- ஸ்ரீ பாரதி தீர்த்ததாசன்)

(ஸ்ரீ ஸ்ருங்கேரி ஸ்ரீ சந்திரசேகர பாரதி சுவாமிகள் அருளியது):

(முன் தொடர்ச்சி)

திரௌபதியை துச்சாதனன் துயிலுரிந்த காலத்தில் ''இதயகமல வாசா'' என அழைத்தவுடன் உதவியருளினார் என்பது வரலாறு. நேசனை நினைப்பவர் நெஞ்சத் துள்ளானை என நக்கீரரும், அன்பர் மனத் தகத்தான் என அப்பர் பெருமானும் கூறினர். எனவே தான் இதயத்திலுள்ள அம்மைக்குத் தனது துயரமெனும் நெருப்பு துன்புறுத்துமே என வேதனையுறுகிறார் ஸ்ரீஜகத்குரு.

ஸ்ரீ அப்பைய தீட்சிதர் மார்கழி மாதத்தில் தில்லையில் நடராஜப் பெருமானுக்குக் குளிர்ச்சியான அபிடேகம் செய்யும் காலத்தில் ''இறைவனே! தலையில் குளிர்ச்சியான கங்கையைத் தரித்துள்ளாய். உன் ஒரு பாகத்தில் குளிர்ச்சி பொருந்திய இமயமெனும் மலையரசன் மகளைக் கொண்டுள்ளாய். இது தவிர குளிர்ச்சியான பாம்புகளையும் அணிந்துள்ளாய். இவ்வளவும் போதாதென, தில்லையில் குளிர்ந்த சந்தனத்தைக் கொண்டு நீராட்டுகின்றனர். இறைவனே! இவ்வளவு குளிர்ச்சியிலிருந்தும் குளிர் காய்வதற்கு ஒரு வழி உள்ளது. என் இதயத்தில் பொறாமை கோபம் முதலான வெப்பம் மிகுந்த நெருப்பு உள்ளது. என் இதயத்தில் அமர்ந்தால் குளிர்ச்சியிலிருந்து நீங்கிச் சுகமடையலாம்'' என்றார்.

தன் இதயத்திலுள்ள நாயகனுக்குத் துன்பம் வரக் கூடாது என எண்ணுகிறாள் ஒரு பெண். வெம்மையான நீரை அருந்தினேன் என்றால் என் இதயத்திலுள்ள என் நாயகருக்கு வெப்பத்தினால் துன்பம் ஏற்படும் என்று வெந்நீர் அருந்த ஒரு பெண் மறுத்தாள் என்கிறார் திருவள்ளுவர்.

நெஞ்சத்தால் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து. (குறள் 1128)

அயோத்தியில் பெண்ணொருத்தி, தன் தோழிகள் இனிமையான மதுவருந்துவது கண்டு என் இதயத்திலுள்ள என் கணவருக்கு இது பிடிக்காது என மதுவருந்த மறுத்தாள் என்கிறார் கம்பர். உள்ளுறை அன்பன் உண்ணான் என நறவுண்ணல் எண்ணாள்.

(உண்டாட்டுப் படலம்)

நான் பிறந்த நாள் முதல், ஆசை, கோபம், பொய் முதலான குப்பைகளால் நிறைந்த என் இதயத்தைத் தூய்மைப்படுத்தி, அடங்காத ஐம்புலன்களான மாடுகளை விரட்டி, அன்பினால் மெழுகி, அருளான விளக்கேற்றி துன்ப இருளை விரட்டி, மெய்யென்ற விதானமிட்டு என் மனத்தை நீ இளைப்பாறத்தக்க பள்ளியறையாக்கியுள்ளேன் என்கிறார் திருக்கழுமல மும்மணிக்கோவையில் பட்டினத்தார். இறைவன் குடியிருக்கும் மனம் தூய்மையாயிருக்க வேண்டும் என்பது குறிப்பு. எனது நெஞ்சில் துக்கமாகிய நெருப்பு உள்ளது. தாயே! நீயும் என் நெஞ்சில் உள்ளனை. அத்தகைய நெருப்பு உன்னைத் துன்புறுத்தும். எனவே என் நெஞ்சிலுள்ள துயரத்தை நீக்கி, உனக்கும் துன்பமில்லாது எனக்கும் நிம்மதி கிடைக்க அருள் வாய்! என்கிறார்.

எங்கும் பரந்துள்ள நீ என்மனத்தும்
இருப்பாய் : மனத்துட் பரப்புற்றதுக்க
அங்கியால் துன்பம் நீ அடைதி என்று அயர்வேன்
ஆயே! என் துக்கம் விலக்கியருள்வாயே!

அழியக்கூடிய இவ்வுடல் பொய்யானது. இதை மெய் என அழைப்பது உலகத்திலேயே பெரும் பொய். பொய்யான உடலை நம்பி உலகாதய வாழ்வில் ஆசை வைப்பது எவ்வளவு அறிவீனம்! கடலிலிருந்து அலைகள் தோன்றிக் கரையை நோக்கி ஆரவாரத்துடன் வந்து மீண்டும் கடலிலேயே கலந்து விடுகின்றன. அம்முறையிலேயே நாம் இறைவனிடமிருந்து தோன்றி மீண்டும் இறைவ னிடமே கலந்து விடுகிறோம். நம் தோற்றம் வாழ்வு எல்லாமே மாயை. தன்னைத் தவிர வேறொன்றுமில்லாப் பரம்பொருளுடனே ஒன்றாகிவிடும் நிலையையே அத் வைதம் (இரண்டில்லாதது) என்பர்.

அத்வைதம் பெரும் பேறு என்று அறியாமல்
யான் எனதெனும் பேயகந்தை யொடு
மத்தமதியினர் போல் மனம் கிடப்ப
இன்னம் இன்னணம் வருந்துவேனோ?

எனப் பேசுகிறார் தாயுமானவர். அருட்பிரகாச வள்ளலார் ''மூடநிலையில் சிறந்த மோகமே! என்றைக்கும் துயரத்தை அளிக்கும் உலகாதய இன்பமெனும் சேற்றிலே என்னை அழுத்தி, மக்கள் மனைவி தாய் தந்தை பொருள் என்ற துயரக் கடலில் அழுத்த வராதே! வந்தால்

இறைவனது அருளான வாள் கொண்டு உன்னை வெட்டு வேன்'' என்கிறார்.

மோகமெனும் ஓர் மூடரில் சிறந்தோய்!
முடிவிலாத் துயர் மூல இல்லொழுக்கில்
போகமெனும் ஓர் அளற்றிடை விழலவும்
போற்று மக்கள் பெண்டு அன்னை தந்தையராம்
சோக வெளியில் அழுந்தவும் இயற்றிச்
சூழ்கின்றாய்! என்னைத் தொடர்ந்திடேல்! தொடரில்
ஓகை ஒற்றியூர்ச் சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவது உண்மை என்று உணரே.

எனவே யாவும் பொய், இறைத்துவம் ஒன்றே உண்மை யானது, அழிவற்றது. நிகரில்லாதது என்பதை அறிய இறைவனது அருள் மிக மிக அவசியம். அப்படிப்பட்ட அத்வைத நிலையை அடைய, நம் ஸ்ரீஜகத்குரு பொய்யை வெல்ல மெய்யறிவு வேண்டுகிறார்.

ஆன்மசித் துச்சத்யம் அத்வைத மாமே
அயல் யாவும் பொய்யே என்றறைகின்ற நூலே
தான் மோக மதனால் மறைந்து விடும் தாயே!
சடுதியே என் துயரதுஅ கற்றி விடுதாயே 12

ஒரு ஊருக்குச் சென்றால் நமது காரியம் முடிந்ததும் திரும்புகிறோம். அதுபோன்றதே பிறப்பும் இறப்பும். நம் வேலை முடிந்ததும் இறைவன் நம்மை பூவுலகத்திலிருந்து நீங்குமாறு செய்கிறார். விசுவாமித்திரரின் வேள்வியைக் காக்க வந்த இராமபிரான் சுபாகு என்ற அரக்கனைக் கொன்று அவனது அண்ணனான மாரீசனைக் கொல்லவில்லை. பெற்ற தாயான் தாடகைக்கு அவன் கடமை செய்ய வேண்டியிருந்ததால் மாரீசனை அழிக்கவில்லை என்பது குறிப்பு.

பெரியோர்களுக்கு யமவாதனையே கிடையாது. வேண்டும்போது உடலை உதறும் ஞானிகளை இச்சா மரணி என அழைப்பர் ஸ்ரீ சாரதா புஜங்கம் என்ற இந்நூலை அருளிச் செய்த ஸ்ரீ சந்திர சேகரபார்தி சுவாமிகள். இந்தியாவின் தலை சிறந்த சென்னை வாசியான ஒரு பிரமுகருக்கு ஒரு தேதி குறிப்பிட்டு ஸ்ருங்கேரி வருமாறு பணித்திருந்தார். அந்தப் பிரமுகர் வெளிநாடு செல்ல வேண்டியிருந்ததால் வர இயலவில்லை. ஸ்ரீ சுவாமிகள் அந்தத் தேதிக்கு அடுத்தினம் துங்கபத்ரா நதியில் பத்மாசனமிட்டுக் கொண்டு மூழ்கினார். உடலை உதறினார். அதே பத்மாசனமிட்ட நிலையில் அவர்களுடைய திருமேனியை துங்கபத்ரா நதியிலிருந்து எடுத்தனர். உடலுக்குள் ஒரு துளி நீர் கூட உள்ளே செல்லாது மூச்சை நிறுத்தி முத்தி பெற்ற இப்பெரியவர்களின் பெருமையைக் கண்டு உலகமே வியந்தது.

ஞானிகள் மரணத்திற்கு அஞ்சமாட்டார்கள். நமன் வரின் ஞானவாள் கொண்டு எறிவேன். சிவன் வரின் நான் உடன் போவது திண்ணம் என்றார் திருமூலர். அந்தகா! வந்து பார் சற்று என் கைக்கு எட்டவே என்றார் அருணகிரிநாதர். சிவபக்தருக்கு யமனது காட்சியே கிடைக்காது கண்ணுதல் காட்சி கிடைத்த விழிக்கு இல்லை - வெல்கூற்றத்தின் தோற்றம் கொளல் என்றார் குமர குருபரசுவாமிகள். கரவினில் வந்துயிர்க் குலத்தினை யழிக்கும் காலன் நடு நடுங்க விழித்தோம் என்றார் தேசிய கவிபாரதியார். அம்முறையில் ''என்னைக் கொண்டுபோக யமதூதர் வந்தால் கருணாம்பிகையான சாரதாதேவி! நீ என் மனத்திலிருந்து காத்தருள வேணும் என்றார்.

பெரும்பாவியாம் எனைப் பற்றி ஏகக்
கொடும் அந்தகன் தூதர் வருமந்த நேரம்
இரும் தயாசித்தான என்னம்மை நீயே
என் மனந்தனிலே எழுந்தருளு வாயே 13

உலகில் நாம் அனுபவிக்கும் இன்பதுன்பங்கள் நமது முன்பிறவியில் செய்த புண்ணிய பாவங்களைப் பொறுத்தவை. நம் பாவ புண்ணியங்களை நாம் அறியாது ஒளிக்கும் சக்தியைத் திரோதனம் என்பர். தில்லை நடராசப் பெருமானின் ஊன்றிய திருவடிக்கு அடியில் மறைத்து அழுத்திவைக்கப்பட்டிருக்கும் முயலகன் என்பவனே நமது முன் வினைப் பயன்கள் என்பர் குமரகுருபர சுவாமிகள்.

ஈட்டிய வினைப்பயன் எவற்றை மறைத்து நின்று
ஊட்டுவதாகும் நின் ஊன்றியபதமே.

புண்ணிய மூர்த்தியான பட்டினத்தடிகளைத் திருட்டுக் குற்றம் சுமத்திக் கழுவேற்ற முயன்ற போது ''அடியேன் பிறந்தபின் எந்தக் குற்றமும் செய்யவில்லை. பிறப்பதற்கு முன் செய்ததீவினை தான் இவ்வாறு வந்ததோ?'' என்றார்.

என் செயலாவது யாதொன்றுமில்லை, இனித்தெய்வமே
உன் செயலே என்று உணரப் பெற்றேன்: இந்த ஊனெடுத்த
பின் செய்த தீவினை யாதொன்றுமில்லை : பிறப்பதற்கு
முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே

என் செயல் இல்லை என அவர் கூறியதும், இறைவன் அருள் கழுமரம் பற்றி எரியுமாறு செய்தது. நல்வினைக்கும் பலன் உண்டு. இறைவனை நினைக்க என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என்றார் அப்பர் சுவாமிகள்.

இத்தகைய மறைக்கும் சக்தியை வணங்குகிறார் ஸ்ரீ ஆசாரியார். ''மாபாவியான என்னைக் காக்கின்றாய்! என் புண்ணியபாவங்கள் என்ன என அறிந்தால் உலகம், ஒருபக்க நியாயமுடையவள் என ஏசும். என் பாவ



சென்னை தீவுத்திடலில் நடைபெறும் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள நம் அரங்கினை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப. அவர்கள் வருகை தந்து பார்வையிடுகிறார்கள்.

---

புண்ணியங்களை உலகறியா வண்ணம் மறைத்த உன் கருணையை என்னவென்பேன்?

மாபாவி எம்மைக் கடைத்தேற்றவேண்டி
மறைக்கின்ற எம்பாவ புண்யங்கள்: அன்றேல்
மாபாவி எம்மைப் புரந்தருளும் உன்னை
வரையும் இவ்வுலகம் ஓர் சார்புடையள் என்றே. 14

நான் என இச்சரீரத்தை எண்ணி, என்னுடையது என்ற மமகாரம் ஏற்பட்டு மனிதன் உழல்கிறான். இவ்வுடல் அசுத்தமானது. இத்தகைய அசுத்தமான உடலையும் அதன் தவறான குணங்களான நான், என்னுடையது என்ற அகங்கார மமகாரங்களையும் நீக்கி என்னையாட்கொண்ட இறைவனின் கருணையே கருணை என்கிறார் மணிவாசகப் பெருமான்.

பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந்து: உளுத்து அசும்பு
ஒழுகிய பொய்க்கூரை
இத்தைமெய்யெனக் கருதி நின்று: இடர்க்கடல்
சுழித்தலைப்படுவேனை
முத்துமாமணி: மாணிக்க: வயிரத்த பவளத்தின்
முழுச்சோதி
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங்கண்
டோமே.
அதிசயப்பத்து

உடம்பை மறந்து, நான் என்னுடையது என்பன நீங்கி எங்கும் இறைவனைக் காணும் தன்மையை வேண்டுகிறார் தாயுமானவர்.

யானெனல் காணேன்: பூரண நிறைவில் யாதினும்
நிறைந்த பேரொளிநீ
தானென நிற்கும் சமத்துற என்னைத் தன்னவன்
ஆக்கவும் தகும் காண்

என்கிறார். உடல் மீதுள்ள ஆசை தான் துன்பங்களுக்குக் காரணம். நான் எனது என்ற தன்மையை விட்ட பெரியோர்கள் உன்னைச் சரணாகதியடைகிறார்கள். ஆசை நீங்கிய அவர்கள் எல்லாவற்றிலும் இறைத்தன்மையைக் காண்கிறார்கள். மீண்டும் பிறவாத நிலைமையை அடைகின்றார்கள்.

நான் எனது என்றதன்மைகள் நீங்கி வாழ உன்னை அடைக்கலம் புகுந்து தாமே எங்கும் நிறைந்த தெய்வத்தின் வடிவு காண்கின்றது உன் விசித்திரமான அருளின் கருணைச் செயல் என்கிறார் ஸ்ரீ ஜகத்குரு.

சரீரத்தில் நானெனும் பாவனைகள் நீங்கச்
சரணடையும் மாந்தருன்னைச் சாரதாம்பா!
சருவத்திலும் நானெனும் பான்மையு றுவார்
சச்சிதானந்த வடிவே இது விசித்ரம் 15

*(அடுத்த இதழில் பூர்த்தியாகும்)*

★★★

# வினாவும் விளக்கமும்

- பருத்தியூர் டாக்டர் ப. சந்தானராமன், M.A., D.Litt., Ph.D.,

(முன் தொடர்ச்சி)

6) வினா: கணபதி அம்மையப்பனை வலம் வந்து ஞானப்பழத்தைப் பெற்றார். ஞான பண்டிதன் என்று புகழப்படும் முருகனுக்கு அம்மையப்பனைச் சுற்றி அதனைப் பெறலாம் என்பது தெரியாதா?

விளக்கம்: முருகனுக்கு அது நன்றாகத் தெரியும். அதுபோல் முழுமுதற் கடவுளான கணபதிக்கும் உலகை வலம் வர இயலும்.

இவ்வரலாற்றில் ஓர் உட்பொருள் பொதிந் துள்ளது. இருவரும் இரண்டு நெறிகளை உலகுக்கு உணர்த்தியுள்ளனர்.

எல்லாவற்றிலும் இறைவனைக் காண்பது ஒரு நெறி. பரம்பொருள் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதால் அண்டங்கள் அனைத்தும் அதன் வடிவந்தான்.

தனது மயில் வாகனத்தில் உலகைச் சுற்றி வந்த முருகன் எங்கும் இறைவன் உள்ளான் என்பதை உணர்த்தி னான்.

இறைவனிடமிருந்தே அனைத்தும் தோன்றி அவ னிடமே 'லயம்' அடைகின்றன. ஆகவே, இறைவனிடம் உலகைக் காண்பது ஒரு நெறி. அம்மையப்பனைச் சுற்றிய கணபதி அனைத்தும் பரம்பொருளே என்று உணர்த்தி னார்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் தட்சிணேஸ்வரத் தில் இருந்தார். அவரை நாடி, உலகம் அங்குச் சென்று அவரை வணங்கியது.

விவேகானந்தர் உலகம் சுற்றி, சமயத்தின் மேன் மையை உணர்த்தினார்.

காஞ்சி பரமாச்சாரியர் இருந்த இடத்துக்கு, அவ ரைக் காண உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்தனர்.

சுவாமி சின்மயானந்தர் உலகம் முழுவதும் சுற் றிக் கீதைப் பேருரைகளின் வழியே ஆன்மீகம் வளர்த் தார்.

இவர்கள் நால்வருமே அறநெறியும் ஆன்மீக மும் வளர்த்தார்கள். பரமஹம்சரும் பரமாச்சாரிய ரும் பின்பற்றியது கணபதி காட்டிய வழியென்றால் விவேகானந்தரும், சின்மயானந்தரும் மேற்கொண்ட நெறி முருகன் காட்டிய வழி எனலாம்.

உலகமெல்லாம் இறைவன் என்றாலும் இறை வனே உலகம் என்றாலும் அதன் பொருள் ஒன்றுதான். சொல்லும் முறைதான் வேறாகத் தோன்றுகிறது. அவ் வளவுதான்!

7) வினா: ஐயப்பன் நித்திய பிரம்மச்சாரியாக விளங்குகிறார். சாஸ்த்தாவுக்கு, பூரணை, புட்கலை (பூரணாம்பா, புஷ்கலாம்பா) என்ற இரண்டு தேவிகள் உண்டு என்று கூறுகின்றனர். ஏன் இந்த முரண்பாடு?

விளக்கம்: இரண்டு கருத்துக்களுமே உண்மை தான். சாஸ்த்தா என்ற ஐயனார் மூலமூர்த்தி ஆவார். அவரது அவதாரம் மணிகண்டன் என்ற ஐயப்பன். இதனைப் புரிந்து கொண்டால் முரண்பாடு தோன்றாது.

திருமால் (மகாவிஷ்ணு) மூலமூர்த்தி. அவர் பத்து அவதாரங்களை எடுக்கிறார். அப்பத்து அவதாரங்களில் ஒன்று வாமன அவதாரம். அந்த அவதாரத்தில் அவர் (வாமனராகிய திருமால்) பிரம்மச்சாரியாவார்.

இராமாவதாரத்தில் ஒரே மனைவி. ஆனால் கிருஷ்ணாவதாரம் அப்படியில்லை.

அவ்வாறே, மூலமூர்த்தியாகிய சாஸ்தா என்ற ஐயனார் பூரணை, புஷ்கலை என்ற இரண்டு தேவியரை மணந்திருந்தார். தமிழ்க் கந்தபுராணத்திலுள்ள மகாசாத் தாப் படலம் அவரைப் 'பூரணைக்கு இறைவன்'' என்றும் ''புட்கலை கணவன்'' என்றும் குறிப்பிடுகிறது.

மூலமூர்த்தியாகிய ஐயனார் பந்தள நாட்டு மன்ன னின் திருமகனாக அவதரித்த பொழுது 'மணிகண்டன்' என்ற பெயருடன் விளங்கினார். அவரைத்தான் ஐயப்பன் என்று கூறுகிறோம். அவர் யோகமூர்த்தியாகவும் பிரம்மச் சாரியாகவும் விளங்குகிறார்.

8) வினா: ஸ்ரீசக்கரம் என்பது என்ன? அதன் தனிச் சிறப்பு என்ன?

விளக்கம்: தெய்வங்களைக் கற்சிலைகளாகவும், உலோகப் படிமங்களாகவும் வழிபடுகிறோம். அந்தத் திருமேனிகளை 'அர்ச்சா மூர்த்தம்'' என்பர். தெய்வங் களின் ஆற்றல்களை வரிவடிவில் வரைந்து வழிபடும் முறை 'யந்திர வழிபாடு' எனப்படும். இத்தெய்வீக யந்திரங்கள் பொன், வெள்ளி, செம்பு போன்ற உலோகத் தகடுகளில் செய்யப்படும். யந்திரங்களைச் 'சக்கரம்' என் றும் கூறுவர். ஒவ்வொரு தெய்வத்துக்கும் தனித்தனியே

யந்திரங்கள் உண்டு. அவ்வை கோணங்களாலும், பிற வரி வடிவங்களாலும் வேறுபடும். எடுத்துக்காட்டாக, முருகனின் யந்திரம் ஆறு கோணங்களும், அம்பிகையின் யந்திரம் நாற்பத்து மூன்று கோணங்களும் கொண்டு அமையும்.

அம்பிகைக்குரிய யந்திரமே 'ஸ்ரீசக்கரம்' என்று புகழ்பெற்ற யந்திரமாகும்.

சிவகோணங்கள் நான்கும், சக்தி கோணங்கள் ஐந்தும் ஆக, ஒன்பது கோணங்கள் இணைந்து ஒன்றையொன்று வெட்டுவதால் மொத்தம் நாற்பத்து மூன்று கோணங்கள் உண்டாகின்றன. அதன் நடுவணையில் 'பிந்து மண்டலம்' என்ற நுண்ணிய இடத்தில் அம்பிகை எழுந்தருளுகிறாள். எல்லாச் சக்கரங்களையும் விட அன்னை, உறையும் ஸ்ரீசக்கரம் தலையாயது. எனவே, அதனை, 'சக்ரராஜம்' (சக்கரங்களுக்குள் அரசன்) எனப் போற்றுகின்றனர். இந்த ஸ்ரீசக்கரத்தில் அனைத்துத் தத்துவங்களும் அடக்கம். குறிப்பாகக் கூறின் இன்றைய அணு சக்தி விஞ்ஞானமும் அடக்கம்.

வழிபடுவோரின் குறிக்கோளும், எண்ணங்களும் உயர்ந்தனவாகவே இருத்தல் வேண்டும் என்பதை மேல் நோக்கிய கோணங்கள் உணர்த்துகின்றன. அவ்வாறு வழிபடுவோரின் எண்ணமும் குறிக்கோளும் உயர்ந்தனவாயின் இறைவி கீழ்நோக்கி இறங்கி வந்து அருள்பாலிக்கிறாள் என்பதை, கீழ்நோக்கிய கோணங்கள் குறிக்கின்றன.

அன்னைக்குரிய யந்திரமாகிய ஸ்ரீசக்கரம் அணு சக்தி விஞ்ஞானத்தின் வரைபடமே எனலாம். அணுவுக்குள் 'எலக்ட்ரான்கள்' என்ற நுண்கூறுகள் அலை அலையாய்ச் சுழன்று கொண்டேயிருக்கின்றன. 'புரோட்டான்கள்' குறுக்கும் நெடுக்குமாகச் சுழன்று கொண்டிருக்கின்றன. நடுவில் உட்கரு (Nucleus) அமைகிறது. அந்த உட்கரு (Nucleus) என்ற இடத்திலிருந்தே 'நியூகிளியார் எனர்ஜி' என்ற சக்தி கிடைக்கிறது என்பது தற்கால விஞ்ஞானம்.

ஸ்ரீசக்கரத்தில் குறுக்கும் நெடுக்குமாக வரையப்படும் கோணங்கள் 'புரோட்டான்களை'க் குறிக்கின்றன. வெளியில் வரையப்படும் தாமரை இதழ்கள் போன்ற வட்டங்கள் அலைஅலையாய்ச் சுழன்று கொண்டிருக்கும் 'எலக்ட்ரான்களை'க் குறிக்கின்றன. நடுவில் உள்ள 'பிந்து' என்ற புள்ளி 'நியூகிளியரை'க் குறிக்கிறது. அப்பிந்துவே சக்தியின் இருப்பிடம் என்கிறது நமது மெய்ஞ்ஞானம். ஆகவே, அணுசக்தி அறிவியலும் அன்னையின் மெய்ஞ்ஞானமும் வேறல்ல.

ஸ்ரீசக்கரத்தைத் தமிழில் 'திருவாழி' என்று குறிப்பிடலாம். அம்பிகையின் திருத்தேர் 'ஸ்ரீ சக்கர ரதம்' எனப்படும். திருவாரூர் தேரினை 'ஆழித் தேர்' என்று அழைப்பதன் காரணம் இப்போது விளங்கியிருக்கும்.

9) வினா: பாவைப் பாடல்களில் பெண்கள் நீராடுவது குறித்த வருணனைகள் வருவது ஏன்?

விளக்கம்: ஓர் அடர்ந்த காடு. இருள் கவ்விய இரவின் தொடக்கம். அப்போது காட்டுப் பாதையில் ஒருவர் கையில் எரியும் தீவட்டியைப் பிடித்தபடி செல்கிறார். அவரைத் தொடர்ந்து பூக்குடலையுடன் ஒரு மலர் வணிகர் செல்கிறார். அவரைத் தொடர்ந்து யோகி ஒருவர் தனது எளிய உடமைகளுடன் செல்கிறார்.

பொழுது புலரும் நேரத்தில் மூவரும் காட்டைக் கடந்து நகர எல்லைக்குள் நுழைகின்றனர். அங்கு ஒரு பொய்கையைக் காண்கின்றனர்.

தீவட்டி ஏந்தி வந்தவர் பொய்கை நீரில் தீவட்டியை நனைத்து, அதனை அணைத்து விட்டு நேரே தன் வழியில் பயணத்தைத் தொடருகிறார்.

மலர் வணிகர் பொய்கை நீரைக் கையால் அள்ளி மலர்க் குடலையில் தெளித்து விட்டுத் தன் வழியில் நடக்கிறார்.

யோகியோ, பல்துலக்கி, பின்னர் பொய்கை நீரில் மூழ்கியும், நீந்தியும் திளைக்கிறார்.

இது 'ரிக்' வேதத்திலுள்ள ஓர் உருவகக் கதை. இதன் உட்பொருள் வருமாறு:

தமது வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைப் போக்கிக் கொள்வதற்காக மட்டும் சிலர் இறைவனை நாடுகின்றனர். எரியும் தீவட்டியை அணைத்த வழிப்போக்கர் இதனை உணர்த்துகிறார்.

மலர் வாடாமல் இருக்கப் பொய்கை நீரைத் தெளித்த மலர் வணிகர், தமது குடும்பத்தினரின் நலன் கருதி இறைவனை வழிபடும் இரண்டாம் வகையினரை உணர்த்துகிறார்.

நீண்ட நேரம் நீராடிக் களிக்கும் யோகி சிவானந்த வெள்ளமென்னும் பொய்கையில் மூழ்கும் உயர்ந்த வகை அடியார்களை உணர்த்துகிறார்.

பாவைப் பெண்கள் நீராடும் பொய்கை அம்மையப்பனைப் போன்றுள்ளது என மணிவாசகர் வருணிக்கிறார்.

இறையருளில் மூழ்கித் திளைக்கும் பக்தியின் உயர்ந்த அனுபவ ஆனந்த நிலையைத்தான் பாவையர் நீராடும் காட்சிகளின் வழியே பாவைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. (தொடரும்)

★★★

# ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்'' வள்ளுவரின் ஆணிவேர்க் கொள்கை

- புலவர் என்.டி. சிவலிங்கம், எம்.ஏ., பி.எட்.

*1. தவத்தினும் பெரிய சிறந்த ஆற்றல் :* வாழ்வின் அடிப்படையான - இன்றியமையாத தேவை வயிற்றுப்பசி தீர்த்தல். செல்வம் பெற்றதன் முதற் பயன் அதுவே, அற்றார் அழிபசி தீர்த்தல் யாரும் எக்காலத்தும் கடைபிடிக்க வேண்டிய அறம். 'உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே யாவர். வயிற்றுக்கு இல்லா வறியவர்க்கு ஈதலே செல்வத்தின் சிறந்த பயன். பசியைப் பொறுத்துத் தவம் செய்வார் ஆற்றல் மிகப்பெரிது. ஆனால் அதனினும் பெரிது, சிறந்தது பொறுத்தற்கரிய அப்பசியை ஈகையால் மாற்றுவது.

*2. பண்புடையாளன் விருப்பம் :* மெய்யறிவால் தன் மனதைப் பண்படுத்திக் கொண்டவனே தான் மிக முயன்று ஈட்டிய செல்வத்தை வறியவரின் பசிதீர்த்து, சுற்றத்தாரையும் உண்பித்து, உயர்திணை மட்டுமின்றி, அஃறிணை உயிர்களும் வாழ வழிசெய்து, தானும் துய்ப்பதில் கிடைக்கும் இன்பத்தை விரும்பும் பண்புடையாளனாவான்.

*3. அறம், பொருள் - இருபாலினும் பகுத்துண்ணல் :* ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்'' *(322)* என்றும், ''பாத்தூண் மரீஇயவனை'' என்றும் *(227)*; ''பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின்'' *(44)* என்றும், பிறர்க்குப் பகிர்ந்து கொடுத்துப் பின்னர் தான் உண்ணும் வாழ்வின்பத்தைப்பற்றி, விருந்தோம்பல், ஒப்புரவறிதல், ஈகை, சுற்றந்தழால், நன்றியில் செல்வம், இரவு, இரவச்சம் என்ற ஏழு அதிகாரங்களில் பகுத்துண்ணும் அறப் பணியைப்பற்றி இருபாலிலும் பேசிய தெய்வப் புலவர் திருவள்ளுவரின் உள்ளம் அவ்வளவில் அமைதி பெற்றிலது; ஆகவே காமத்துப்பாலிலும் அக்கருத்தை வலியுறுத்துகின்றார்.

*4. காமத்துப்பாலில் பாத்தூண் கருத்து :* இன்ப அன்பின் வளர்ப்புப் பண்ணை இல்வாழ்க்கை. அதில் ஈடுபடும் கருத்தொருமித்த காதலர் வையத்து வாழ வேண்டிய நெறிமுறைகளை அன்பின் ஐந்திணை அடிப்படையில் அனைத்துலகும் கண்டு வியக்கத்தக்க வகையில் எடுத்துரைக்கிறது காமத்துப்பால். சொந்த கற்பனையும், வாழ்வுணர்வும் குறிக்கோளும் காதலின் சிறப்பெல்லாமும் தோன்றுமாறு இயற்றிய அப்பாலிலும் தன் உள்ளம் பெரிதும் விரும்பிய வறுமையைக் கொன்று வீழ்த்தும் பகிர்ந்துண்டு வாழ்தலைப்பற்றிய நீதிக்கருத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார் உவமை வாயிலாக.

*5. எது முழுமன இன்பம்? :* அக உணர்ச்சிகளுள் சிறந்த உணர்ச்சி இன்ப உணர்ச்சி. உள்ளம், உணர்வு, அறிவு, பண்பு, அன்பு, ஆகிய குணங்களால் ஒத்த கணவனும், மனைவியும் கூடி வாழும் வாழ்க்கையில் உண்டாகும் இன்பமே உலக இன்பங்களுள் தலை சிறந்த இன்பமாகக் கூறுவர். ஒருவனும் ஒருத்தியும் மகிழ்ந்து கூடிக்கண்ட முழுமனப் பேரின்பம் இத்தகையது என்று புலமை நலம் வாய்ந்த சான்றோர் எவரும் கூறவில்லை. ஆனால் திருவள்ளுவர், அதனை ஒரு சிறந்த உவமை மூலமாகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

*6. உவமைவிளக்கம் :* ''தாம் வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல் தாமரைக் கண்ணான் உலகு'' *(1103)* என்று ஒத்த தலைவனும் தலைவியும் கூடிய பின் அவளுடைய மென்மையான தோளின் மேல் துயிலுதலுக்கு ஈடான இன்பத்திற்கு, துறவிகளால் அடையப்பெறும் வைகுந்த லோகத்தில் கிடைக்கும் முத்தி இன்பமும் ஈடாகாது என்று முன்னரே கூறியுள்ளார். மேலும் அன்பும் அறனும் பூண்டு வாழ்வாங்கு வாழும் இவ்வாழ்க்கையில் தலைவனும் தலைவியும் மனமொத்துக் கூடும் கூட்டம் தமது இல்லத்தில் வாழ்ந்து, முயன்று தேடிய பொருளைப் பகுத்துப்பிறர்க்கு உதவித் தாமும் உண்டு வாழும் இன்பத்தைப் போன்றது என்று ''தம்மில் இருந்து தமது பாத்து உண்டற்றால், அம்மா அரிவை முயக்கு'' என்ற குறட்பாவால் உணர்த்தியுள்ளார்.

*7. வள்ளுவரின் ஆணிவேர்க் கொள்கை :* புலவர்கள் எக்கருத்தை மிக்க விருப்பம் உடையதாக உணர்கின்றனரோ அதனை உவமையாகவோ உருவகமாகவோ தம் பாடலில் அமைத்து விடுவர். ஒன்றன் உயிரை அழித்தல் மட்டும் கொலையாகாது. ஒருவர் உண்ண உணவளிக்காது ''நறியன அயலவர் நாவில் நீர்வர'' தான்



**மயிலை அருள்மிகு திருவள்ளுவர் திருக்கோயிலில் 16.1.2000 அன்று திருவள்ளுவர் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று இரவு திருவள்ளுவர் திருவீதி உலா மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருவள்ளுவர் திருக்கோயிலின் செயல் அலுவலர் மற்றும் அறங்காவலர்கள் விழா ஏற்பாடுகளை சிறப்புறச் செய்திருந்தார்கள்.**

---

மட்டும் உண்டு வாழ்வதும் கொலையேயாகும். தாம் பெற்ற பொருளைப் பகிர்ந்துண்ணும் பரந்த மனம், ஒருவர்க்கு உண்டாகுமானால் உலகில் உயிர்கள் பட்டினிக் கொடுமையால் வாடும் நிலை வராது. இச் சிறப்புடைய பாத்தூண் வாழ்வே யாண்டும் வற்புறுத்தப் பெறும் சீரிய பேரறம் ஆதலின் திருவள்ளுவர் அதனையே காமத்துப்பாலிலும் புணர்ச்சி இன்பத்திற்கு உவமையாக்கியுள்ளார். பொய்யில் புலவர் கூறியுள்ள உவமை வாயிலாக அவர்தம் நெஞ்சில் நிலை கொண்ட ஆணிவேர்க் கொள்கையை நாம் தெளிவாக உணரலாம்.

**8. பாத்தூண் வாழ்வே சிறப்புடையது :** எல்லோரும் நாடோறும் கடைப்பிடிக்க வேண்டிய பகிர்ந்துண்ணும் அறத்தைச் செய்யும் ஒருவரைப் பசிப்பிணி தீண்டலரிது. ஈத்துவக்கும் இன்பமும் அவர்களுக்கு இடையறாது பெருகும். இஃது எல்லோரும் செய்யக் கூடியது. எஞ்ஞான்றும் செய்யக்கூடியது; தனித்தனி செய்ய வேண்டுவது; இல்வாழ்க்கை இன்பத்திற்கு இல்வாழ்க்கை முறையையே வைத்துக் கூறியுள்ள ஆழமும் அழகும், பொருட் செறிவும் அமைந்த இவ்வுவமையால் பாத்தூண் வாழ்வே சிறப்புடையது என்பதும், பயில்வார்க்குப் பயனையும் நயனையும் நல்க வல்லது என்பதும் அறிந்து மகிழத் தக்கது.

**9. உவமையின் இன்பம் உணர :** இயற்கை வழங்கும் வளன், புவியில் வாழ்வார் அனைவர்க்கும் பொது என்னும் உண்மை உணர்ந்து தாம் ஈட்டிய பொருளைப் பிறர்க்கு விரும்பி வழங்கி வரப்பெறும் இன்பம் எய்தியவர்களே பழந்தமிழர் பண்பும் இயல்பும் விளக்கும் இந்த இனிய உவமை இன்பத்தை உணர்ந்து மகிழ முடியும்.

★★★










மயிலை அருள்மிகு திருவள்ளுவர் திருக்கோயிலில் 16.1.2000 அன்று திருவள்ளுவர் விழா மிகச் சிறப்பாக நம் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப. அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மயிலை சட்டமன்ற உறுப்பினர் திருமிகு ந.பூ. ராமஜெயம் அவர்கள் கலந்துகொண்டு திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்கள். தமிழ்நாடு அம்பேத்கர் சட்டப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் திருமதி பி. நாகபூஷணம் அவர்கள் ''திருக்குறள் பல்கலைக்களஞ்சியம்'' எனும் பொருளில் நடைபெற்ற கருத்தரங்கினுக்குத் தலைமை வகித்துச் சிறப்பித்தார்கள். இக்கருத்தரங்கில் முனைவர் ஆ. கந்தசாமி, வழக்கறிஞர் வீ.செ. கந்தசாமி, பேராசிரியர் சா. செல்வராஜ், ''திருக்கோயில்'' இதழாசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். சென்னை உதவி ஆணையாளர் திருமிகு அ. சுப்பிரமணியன், பி.ஏ.பி.எல் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள்.

விழா ஏற்பாடுகளை திருக்கோயில் செயல் அலுவலர் திரு வி. அன்பானந்தன் மற்றும் அறங்காவலர் குழுத் தலைவர் திருமதி பரமேஸ்வரி இரத்தினவேலு, மற்றும் அறங்காவலர்கள் திரு கே. கிருஷ்ணன், திரு தே. பாலகிருஷ்ணன், திரு எஸ்.கே. ராமன், திரு தா. சுந்தர் ஆகியோர் சிறப்புறச் செய்திருந்தார்கள்.



1.1.2000-ஆம் நாள் அன்று கன்னியாகுமரியில் ''உலகப் பொதுமறை'' தந்த திருவள்ளுவருக்கு வானுயரச் சிலை 133 அடி உயரத்தில் நம் மாண்புமிகு முதல்வர் ''ஐந்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. இவ்வொப்பற்ற விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைத்துக் கட்சித் தலைவர்கள், ''நடிகர் திலகம்'' சிவாஜி கணேசன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.